சிவமயம்

Registered as a Newspaper in Ceylon

P.M. G. NO. H. A 59/300 of 1939.

இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-உ திங்கள் ஆங்கிலம்.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈச னேந்தை யிணையடி நீழலே.

புத் ருகூ] யாழ்ப்பாணம்:—தாரணவு மாசிமீ உகூஉ (1945 மார்ச்மீ 12உ திங்கட்கிழமை) [இல கூஉ

லட்சுமிகாந்தம் கொலை விசாரணை

இளங்கோவனும் இந்துநேசன் ஆசிரியரும் சாட்சியம்

லட்சுமிகாந்தம் கொலைவழக்குவிசாரணை சென்னை பிரதம மாகாண மாஜிஜடிரேட்முன் எடுத்துக் கொள்ளப்பட்டபோது வழக்காளி தரப்பில் 21, 22, 23, 24, 25, 26, 27 வது சாட்சிகளாக முறையே உப நீதிபதி திருகே ஆனந்தன், சிட்டிபாபு, முனிசாமி நாயுடு, கௌரவ நீதிபதி திரு பி. ஆர். கிருஷ்ணமாச்சாரி, பி. முத்து கிருஷ்ண நாயுடு, இளங்கோவன், எம். சுபபராய முதலியார், ஆகியோர் விசாரிக்கப்பட்டனர், இது பதினோராவது நாள் சாட்சியம்.

இளங்கோவன் (எம். கே. கணிகாசலம்) 26-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.

சாட்சி: எனக்கு நன்றாக பாகவதர் கிருஷ்ணன் ஸ்ரீ ராமுலு நாயுடுவைத் தெரியும். சென்ற ஜனவரி மாதத்தில் நானும் அவர்களும் சேர்ந்து அரசாங்கத்தாருக்கு மெமோரியலை அனுப்பினோம். (மெமோரியல் தாக்கல் செய்யப்பட்டது) அதில் இருந்த கையொப்பங்களை சாட்சி அடையாளங் கண்டுபிடித்து ஒப்புக்கொண்டார் அதில் ஸ்ரீராமுலுநாயுடு பாகவதர் நாராயண ஐயங்கார் கிருஷ்ணன் மதுரம் கண்ணுமபர் ராஜகுமாரி முதலியோர் கையொப்பமிருந்தது, சாட்சி அதை ஒப்புக்கொண்டார். லட்சுமிகாந்தம் ஆபாசமாக படத்தில் நடிப்பவர்களிடம் பணம் பறிக்க எழுதுவதாகவும், அதை நிறுத்த அரசினர் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் அதில் வேண்டப்பட்டிருந்தது. அது ஸர்காரிடம் ஸாதிக்கு அனுப்பப்பட்டது. திரு. கணிகாசலம் அதை தயாரித்திருந்தார். லட்சுமிகாந்தம் அதில் கையொப்பமிட்டிருந்த எல்லோரிடமும் ஆபாசமாக எழுதியிருந்தார். நாங்கள் படத்தொழிலில் ஈடுபடிருந்தவர்கள் ஆபாசமாக எழுதப்படுவதைத் தடுக்க எல்லோரும் ஒன்றுசேர்ந்து யோசனைசெய்து ஸ்ரீராமுலு நாயுடுவை எங்கள் சார்பில் நடவடிக்கைகள் எடுக்கும்படி கொள்ளப் பிரதிநிதியாக நியமித்தோம். திரு நாயுடு மெமோரியலைத் தயாரித்து என்னிடம் கொண்டுவந்தார். நான் அதில் கையொப்பமிட்டேன். பிறகு நாயுடுவும் பாகவதரும் நானும் அதை கிருஷ்ணனிடம் எடுத்துச் சென்று அதில் கையொப்பம் பெற்றோம். அந்த மெமோரியலை ஸ்ரீராமுலு நாயுடு உட்லண்ட்ஸ் ஹோட்டலில் தங்கி இருந்தார்.

1944-ம் ஆண்டு ஜனவரி கடைசியில் ஒருநாள் மாலை 6 மணிக்கு உட்லண்ட்ஸிலுள்ள நாயுடு அறைக்கு நான் சென்றேன்: அப்பொழுது திரு நாயுடுபட்டும் அவர் அறையில் இருந்தார். அந்த அறைக்கு புது மனிதர் ஒருவர் சுமார் ஒரு மணி நேரம் பொறுத்து வந்தார். அந்த அறையில் நான் நாயுடுவோடு இருந்தபோது வேறு யாருமில்லை. 6.40 மணிக்கு ஒருவர் வந்தார். அவரை எனக்குத் தெரியாது. அவர் ஸ்ரீராமுலு நாயுடுவைத் தேடிவந்தார். அறைக்கதவு திறந்திருந்தது. 'உமக்கு நாயுடுவைத் தெரியுமா?' என்று நான் கேட்டேன். அதிருப்திகரமாக அவர் பதிலளித்தபடியால் நாங்கள் சந்தேகப்பட்டோம். எந்த ஸ்ரீராமுலுநாயுடு உமக்குத் தேவை என மீண்டும்கேட்டோம். அதற்குப் புது மனிதர் பெஜவாடா ஸ்ரீராமுலு நாயுடுவைத் தேடி வந்ததாகக் கூறினார். லட்சுமிகாந்தத்தின் உளவாளியாக அவர் இருப்பாரென்று நானும் நாயுடுவும் சந்தேகப்பட்டோம். நான் அவரது கன்னத்தில் அடித்து உட்காரும்படி சொன்னேன். நாயுடுவும் அவரை அடித்தார்.

நாயுடு பிறகு சப் இன்ஸ்பெக்டருக்குச் சொல்லியனுப்பினார். பின்னர் மானேஜருக்கு சொல்லி அனுப்பப்பட்டது. மானேஜரும் அதிருப்திகரமாக பதிலளித்தார். புது மனிதர் 1, 2 முறை ஹோட்டலுக்கு வந்திருப்பதாகவும் அவர் கூட்டிக் கொடுப்பவர் என்றும் மானேஜர் கூறினார்.

பிறகு பாகவதர் அறைக்கு வந்தார். பாகவதரும் புது மனிதரை யார் என்று விசாரித்தார். பிறகு பெஜவாடாவுக்குப் பிரயாணமாகப் போய்விட்டார். அதன்பிறகு நாயுடு சொல்லியனுப்பியபடி சப் இன்ஸ்பெக்டர் வந்து விசாரித்துப் புது மனிதரை வெளியே அனுப்பினார்.

சுப்பராய முதலியாரை எனக்குத் தெரியும். அவர் என் கம்பெனியில் வேலைசெய்து வந்தார். கமலநாதனை எனக்குத் தெரியும். அவர் என்னிடம் வந்து 'சினிமா தூது'வுக்கு எதிராகப் பத்திரிகை நடத்தும்படி கேட்டுக் கொண்டார். அதற்கு என் ஆதரவும் கேட்டார். அதற்கு என்னால் அவருக்கு உபகாரம் செய்யமுடியாதென்று கூறி அனுப்பிவிட்டேன்.

ஆரிய வீரசேனனை எனக்குத் தெரியும். எனமீது லட்சுமிகாந்தம் சென்ற வருஷம் ஒரு வழக்குத் தொடுத்திருந்தார். ஆனால் ஆரிய வீரசேனன் அவர் உதவியாளரென்று கேள்விப்பட்டேன். குப்புசாமி என்ற ஒருவருடன் சீனன் வந்து வழக்கை சமரசமாக்கி செய்துகொள்ளும்படி சொன்னார். நான் பதில் கூறவில்லை. அவர் போய்விட்டார்.

சினிமாதூதை லட்சுமிகாந்தம் வனமாலி அச்சுக்கூடத்தில் பிரசுரித்துவந்தார். வனமாலி அச்சுக்கூடத்திற்கு ஒருவரையும் அனுப்பி விசாரித்துவர நான் சொல்லவில்லை.

7-வது எதிரி அட்வகேட் பாரிஸ்டர் எவ் ராஜகோபாலன் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

திரு ராஜகோபாலன் கேள்விகளுக்குச் சாட்சி பதிலளித்ததாவது.—

கேள்வி:—நவம்பர் 7-உ தேதி நீங்கள் எங்கிருந்தீர்கள்? — சேலத்தில் இருந்தேன். பொங்கலுக்குச் சென்னைக்கு வந்தேன். எதிரிகளில் 4 பேர்களை எனக்குப் பல வருஷங்களாகத் தெரியும். இவர்களை 5-ம் 6-உ தேதிகளில் சேலத்தில் நான் பார்க்கவில்லை.

பிறகு 27-வது சாட்சியாக எம் சுப்பராயமுதலியார் விசாரிக்கப்பட்டார். சாட்சி வழக்காளிக்குக் கேள்விகளுக்குப் பின்வருமாறு பதிலளித்தார்:-

நான் குசப்பேட்டையில் சச்சிதானந்தம் தெருவில் குடியிருக்கிறேன். இளங்கோவனை எனக்குத் தெரியும்; நான் ஆவடியில் மேஸ்திரி வேலை பார்க்கிறேன். இதற்குமுன் இளங்கோவன் புரடக்ஷனில் மெஸ மானேஜராக இருந்தேன். அது கீழ்ப்பாக்கத்தில் புரசபாக்கம் ஹைரோடு 101-ம் நம்பரில் இருக்கிறது. எனக்கு பாகவதர், கிருஷ்ணன், ராமுலு நாயுடுவைத் தெரியும். இளங்கோவன் புரடக்ஷனுக்கு வருவார்கள். எனக்கு லட்சுமிகாந்தத்தை தெரியும். 1944 ஜனவரியில் 'சினிமா தூது' என்ற பத்திரிகைக்கு அவர் ஆசிரியராக விருந்தார். அதில் சினிமா நடிகர்கள் டைரக்டர்கள் அவர்களுடைய வாழ்க்கைகளைப் பற்றி எழுதிக்கொண்டிருந்தார்.

ராமுலுநாயுடு, பாகவதர், கிருஷ்ணன், இளங்கோவன் மற்றும் எல்லோரைப்பற்றியும் அதில் எழுதிக் கொண்டிருந்தார்.

கேள்வி:—1944 ஜனவரி மாதக் கடைசி வாரத்தில் என்ன நடந்தது?

இந்த சாட்சியத்திற்குத் திரு கன்தூரி ஆட்சேபனை செய்தார்.

சாட்சி மேலும் கூறியதாவது:

ராமுலுநாயுடு உட்லண்ட்ஸ் ஹோட்டல் 2-நம்பர் அறையில் இருந்தார். நான் இளங்கோவனுடன் அந்த போவதுண்டு.

கே:—அந்தச் சமயத்தில் நாயுடு எதற்காகச் சென்னையிலிருந்தார்?— 'சினிமா தூதை' நிறுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் மனுக்களோடு இங்கு வந்திருந்தார். தேசாதிபதிக்கு மனுப் போடவேண்டுமென நாயுடு, பாகவதர் எல்லோரும் பேசிக்கொண்டார்கள். அந்தச் சமயத்தில் ஒருநாள் சாயங்காலம் 4 மணிக்கு அங்கு போயிருந்தோம். முதலில் இளங்கோவன் போனார். பிறகு நான் போனேன்.

கே:—அப்பொழுது என்ன நடந்தது சொல்லுங்கள்? — 'சினிமா தூதை' எப்படியும் நிறுத்த வேண்டுமென்று பேசிக்கொண்டார்கள். மற்றும் ஏதோ குசுகுசு என்றும் பேசிக்கொண்டார்கள். வனமாலி பிரஸ் லட்சுமிகாந்தம் 'சினிமா தூது' என்று பேசிக்கொண்டார்கள். விவரம் சரியாய்க் கேட்கவில்லை. 10 மணிக்குமேல் நானும் இளங்கோவனும் வந்துவிட்டோம். மறுநாள் இளங்கோவன் என்னை வனமாலி பிரஸுக்குப் போய் என்ன நடக்கிறது என்று பார்க்கச் சொன்னார். போனேன். அங்கு ஏதோ கலாட்டா இருந்தது. அதை இளங்கோவனிடம் சொன்னேன்.

கே:—அன்று சாயங்காலம் என்ன நடந்தது?—அன்று சாயங்காலம் உட்லண்டிற்குப் போனோம். நான் காரிலிருந்தேன். இளங்கோவன் உள்ளே போனார். பிறகு என்னைக் கூப்பிட்டார். நான் ராமுலு நாயுடு அறைக்குப் போனேன். அங்கு நாயுடு, பாகவதர், கிருஷ்ணன், சுபபத்துமார் எல்லோரும் இருந்தார்கள்.

கே:—ஒரு புது மனிதன் இருந்தாரா?—ஆம், ஒரு புது மனிதனும் இருந்தார். அவர் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார். ஏதோ விசாரித்துக் கொண்டிருந்தார்கள். நீ லட்சுமிகாந்தத்தினுடைய உளவாளிதானே, இங்கு வந்து எங்கள் ரகஸியத்தைத் தெரிந்துகொள்ளத்தானே வந்திருக்கிறாய் என்று உபத்திரவப்படுத்தினார்கள்.

தொடர்ச்சி 6ம் பக்கம்

வாள் ஏந்திய கன்னி

கள்வனை வழிமறித்த வீரச்செயல்

கையில் வாள் ஏந்திய 19வயதுள்ள ஒரு இளம் கன்னி களவு செய்வதற்கென வந்த சிலரை வழிமறித்து எதிர்த்து விரட்டினாள் என்னும் விஷயம் சென்றபுதன்கிழமையன்று சொல்லப்பட்டது.

கொரத் தோட்டையில் வசிக்கும் திரு. எஸ். பி. சில்வா எனும் ஒரு பணக்காரர்வீட்டில் சிலர் திருடுவதற்கென கடந்த செவ்வாய்க்கிழமை இரவு சென்றனர் எனத் தெரிகிறது. வீட்டுக்குள் முதலாவதாகச் சென்ற கள்வன் திருமதி. சில்வாவின் தொண்டையை நெரிக்க முயன்றான், அச்சமயம் அவளருகிலிருந்து வந்துகொண்டிருந்த அவரது மகள் குறித்த கள்வனை தாக்கியதுமல்லாமல் அவன் வீட்டுக்குள் வரமுடியாதபடியும் தடுத்தார். அதே சமயம் இந்தக் கன்னி உதவிக்கு அவரது தகப்பனாரைக் கூவியழைத்தார். திரு. சில்வா உடனே தனது துப்பாக்கியை எடுத்து விட்டிலுள்ள முன்னறையிலிருந்து கால் எடுத்துவைத்த ஒரு கள்வனை சுட்டுவீழ்த்தினார். இவனது காயத்திலிருந்து இரத்தம் ஆறாகப் பெருகியது. திரு. சில்வாவின் குமாரி அவனுக்கு ஆரம்ப சிகிச்சையளித்து அவனைப்பற்றியும் அவன் சகாக்களைப் பற்றியும் சில தகவல்களை சாமர்த்தியமாக அறிந்துகொண்டார். இதனபின் இக்கள்வன் மரணமானான்.

மரணவிசாரணையின்போது இறந்தவர் ஹொராகொடையைச் சேர்ந்த ஜி பியதாஸஎனத் தெரியவந்தது.

இந்தச் சம்பவத்தில் திரு. சில்வாவின் குமாரி காட்டியுள்ள துணிவும் அவரது விவேகமும் மிகவும் பாராட்டத்தக்கதென மரண விசாரணை அதிகாரி கூறியதுடன் திரு. சில்வாவையும் அவரது சொந்த ஜாமீனில் விடுதலை செய்தார்.

'யுத்தம் சீக்கிரம் முடிவடையும்'

கோபெல்ஸின் கூற்று

லண்டன் மார்ச் 8

யுத்தம் கடைசிக் கட்டத்தை யடைந்துவிட்டதென்றும் ஆகவே சீக்கிரம் யுத்தம் முடிவுக்கு வருமென்றும் 'டாஸ்சீச்' என்ற பத்திரிகையில் கோபெல்ஸ் எழுதிய கட்டுரையொன்றில் குறிப்பிட்டிருக்கிறாரென்று ஜெர்மன் வெளிநாட்டுச் செய்திஸ்தாபனம் இன்று அறிவிக்கிறது.

ஒவ்வொருவருடைய உயிருக்காக இன்று சண்டைசெய்யவேண்டுமென்றும் தக்க தருணத்தை ஜெர்மன்மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்களென்றும் அவர் கூறினாராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரணவரு
மாசிமீ உகூஉ திங்கட்கிழமை

"கூப்பன்" மூலம் புடைவை வழங்குதல்

வருகிற ஏப்பிரல் மாசம் முதற்றேதி தொடக்கம் இலங்கையிலுள்ள மக்களுக்குக் கூப்பன்மூலமாகப் புடைவை உதவப்படுதற்கான முயற்சிகளை அதிகாரிகள் செய்கின்றனரென அறியலானோம்; கூப்பன் மூலமாகப் புடைவை உதவப்படுவதையிட்டு இங்குள்ள மக்கள் பலவாறு அபிப்பிராயப்படுகிறார்கள்; கூப்பன்மூலம் புடைவை உதவப்படும்முறை அநுசரணையில் வரும்போது போதிய புடைவைகள் கிடைக்கும், உடுக்குந் துணிக்குப் பஞ்சமின்றி அணிந்துகொள்ளலாமென்பது ஒருசாரார் கொள்கை! கூப்பன்மூலம் புடைவை கொடுக்கப்படின், ஆரம்பத்திலே ஒருவாறுபுடைவை கொடுக்கப்படினும் காலகதியிற்புடைவை கொடுக்கப்படுதல் குறைந்து போமெனவும் அதனால் உடுக்குந் துணிக்குப் பஞ்சப்பட வேண்டுமென்றும் இன்னொரு சாரார் பயப்படுகின்றனர்;

உணவுப் பொருள்களைக் கூப்பன் முறையில் உதவுவதற்கும், புடைவையை அந்த முறையில் உதவுவதற்கும் பேதமுண்டு; இப்பொழுதும் ஐக்கிய சங்கக் கடைகளிற் பங்குக்காரர்களுக்குத் துணிகள் உதவப்படும் முறையை நாம் அறிவோம்; சங்கக் கடைகள் சிலவற்றிற் "சீட்டுப்" போட்டும், சிலவற்றிற் பங்காளிகளின் இலக்கங்களின் தொகையைப் பிரித்துப் பிரித்து முதலிலிருந்து கடைசிவரையில் முறை முறையாகவும், உதவப்படுதலாகிய கொள்கைகளுண்டு. இந்த முறையில் புடைவையைப் பெறுவோர் தாம் விரும்பிய இனம், நீளம் அகலங் கொண்ட சேலையை, இல்லையேல் வேட்டியை, இல்லையேல் துணிகளைப் பெறலாமெனக் காத்திருக்க வொண்ணாது; "அன்றி அது வரினும் வந்தெய்தும்" என்ற பிரகாரம் அவரவர் விரும்பிய துணிகளும் சிலசமயத்தில் வருவதுண்டு; "ஒன்றை நினைக்கின் அது வொழிந்திட் டொன்றாகும்" என்றாங்கு, பெரும்பாலும் புடைவை பெறுவோர் அப் புடைவை தங்கள் நோக்கத்திற்கு இயையாதொழியினும், பயன்படாதொழியினும் கடையிற் கொடுத்ததையே வாங்க வேண்டியவர்களாகின்றனர்; இஷ்டமில்லையாயின் வாங்காது விடவேண்டியவராகின்றனர்; இக்காரணங்கள் பற்றியே இங்குள்ள மக்களுட் பலர் தாங்கள் விரும்பிய துணிகளைப் பெறுதற்காகச் சோர வியாபார முறையிற் புடைவைகளை வாங்கும்படி தூண்டப்படுகின்றனர்.

இப்படியான பிழைகளும் சங்கடங்களும் நேராமல், சனங்கள் இயன்றவரையில் திருப்தியாகப் புடைவைகளைப் பெற்றுத் தரிப்பதற்காகிய வசதிகளைக் கட்டுப்பாட்டதிகாரிகள் செய்வரோ என்பதுதான் ஆசங்கை. அமெரிக்காவிலிருந்து இங்கு வந்திறக்குமதியான புடைவைகள் கொழும்பு கண்டி யென்னுமிரு பட்டினங்களிலும் விற்கப்பட்டபோதும் அந்தப் புடைவைகளைக் கண்ணால் நாம் இன்னமும் கண்டதில்லையென அப்பட்டினங்களில் வசிப்போர் இன்றும் முறையிடக் கேட்டுள்ளோம்.

டான்ஸிக் நகர்மீது குண்டு பெய்தல்

மாஸ்கோ மார்ச் 10

பெர்லினிலிருந்து 31 வது மைலிலும் ஓடர் நதிக்கு மேற்கிலும் சண்டை நடைபெறுவதாக வெளிவந்துள்ள ஜெர்மன் அறிக்கைகள் இன்னும் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

பிரம்மாண்டமான பால்டிக் துறைமுகங்களான டான்ஸிக்கையும், ஸ்டெட்டினையும் தகர்ப்பதற்காக மார்ஷல் ஷுகோவும், மார்ஷல் ரக்கோஸோங்கியும் இன்றிரவு முயற்சி செய்து வருகின்றனர். கூடிய விரைவில் இந்த இரண்டு நகரங்களும்கைப் பற்றப்படலாம்.

டான்ஸிக் போர்முனையில் மார்ஷல் ரோகோஸோஸ்கியின் முன்னணிப்படைகள் தென்மேற்கிலிருந்து அரசரமாக முன்னேறி இன்றிரவு டான்ஸிக் நகருக்குச் சமீபத்தில் வந்து சேர்ந்திருக்கின்றன. கறறுப் டறங்களிலுள்ள ஜெர்மன் பாதுகாப்பு ஸ்தலங்களை ஸோவியத் துப்பாக்கிகள் தகர்த்துக்கொண்டிருக்கின்றன. ஸ்டால்ப் என்னுமிடம் கைப்பற்றப்பட்டது. இது கோஸ்லினுக்கு வடகிழக்கே 30 மைல் தூரத்திலுள்ள முக்கிய ஸ்தலமாகும்.

டான்ஸிக், டினியா முதலிய ஸ்தலங்களில் சிக்கவைக்கப்பட்டுள்ள ஜெர்மானியர்கள் இன்னும் நெருக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் புதிய வெற்றிகள் கிடைத்துக்கொண்டிருப்பதுதான் இதற்குக் காரணமென இன்றிரவு வெளியான சோவியத் அறிக்கை கூறுகிறது. கோஸ்லினுக்கு வடகிழக்கே 23மைல் தூரத்திலுள்ள ஸ்லாவே என்னுமிடம் கைப்பற்றப்பட்டதாக பிரஸ்தாப அறிக்கை ஊர்ஜிதம் செய்தது. இந்த ஸ்தலத்தை தாங்கள் இழந்துவிட்டதாக ஜெர்மானியர்களே நேற்று ஒப்புக் கொண்டனர். ஆனால்செம்படையினர், ரூரான் வால்டே, ஸ்டால்ப் முன்டே என்னும் ஸ்தலங்களையும் வடக்கு போமெரேனியாவில் மற்றும் 200 ஸ்தலங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

பாலட்டான் ஏரிக்கு வடகிழக்கே டானியூப் பிரதேசத்தில் ஊடுருவிச் செல்ல நாஜியர் தொடர்ந்து முயற்சித்ததாகவும் ஆனால் அவர்களுடைய 70 டாங்கிகள் நேற்று நாசமாக்கப்படவோ முடமாக்கவோ செய்யப்பட்டதாகவும் ஸோவியத் அறிக்கை கூறுகின்றது மொத்தம் இந்தப் பகுதியில் 128 நாஜி டாங்கிகள் நாசமாக்கப்பட்டன: 61 சத்துரு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன:

ஹங்கேரியில் பாலட்டான் ஏரிக்கு வடகோடியில் செஸ்பிரேமி ஊள்ள புகைரதச் சந்திகளை ஸோவியத் விமானங்கள் தாக்கியதாகவும் அங்கிருந்த இராணுவத்தினர்க்குத் தீ மூட்டப்பட்டதாகவும் ஸோவியத் விமானப் படை அறிக்கை கூறுகிறது:

ஸுத்கோவ், ராக்கோஸோஸ்கி ஆகியோர்களின் படைகள், சமீபத்தில் நடைபெற்றுள்ள டாங்கி யுத்தத்தில் ஏராளமான பொருள்களை முன்னரே கைப்பற்றிக் கொண்டனர்: ஜெனறல் ஸுத்கோவில் போர்முனையில் இழந்த நமது குதிரைப்படை வீரர்கள் புகைரத 'டிரக்'களையும் டீஜன தொன்னைகளான யாதிரங்களையும் கைப்பற்றினர்: டானஸிக்கிலும் ஏராளமான சாமான்களை நாஜியர் தேடித் வைத்திருக்கின்றனர்:

சோல்பெரி சபையின் யாழ்ப்பாண விஜயம்

(முற்றொடர்)

அதன்பின்னர், விசாரணைக்கர்த்தர்கள் வசாவிளான் என்னுங் கிராமத்தையடைந்து தொல்காப்பிட்டியிலுள்ள தோட்டத்தையும் பார்த்துக்கொண்டு பருத்தித்துறையை நோக்கிச்செல்லாராயினர். அம்மார்க்கத்தில் நெல்லியடி தொடக்கமாக பல ஆவணங்கள் (நடைப்பந்தர்கள்) இடப்பட்டிருந்தன. தெருவீதியின் இருமருங்கும் பள்ளிக்கூடமாணவர்களும் ஏனையோரும் அவர்கள் வரவைக்கண்டுமகிழ்ச்சி மேலீட்டினால் ஆரவாரஞ் செய்தனர். நெல்லியடியில் இடப்பட்ட பந்தரில் கட்டைவேலிக் கோவிற்பற்று ஜனங்களின் பொருட்டு திரு. S. மகேசன் என்பவர் விசாரணைக்கர்த்தர்களுக்கு வந்தனோபசாரப் பத்திரம் வாசித்தார்.

நெல்லியடிச் சந்தி தொடக்கமாக வடமராட்சியிலுள்ள ஆண்கள் பெண்கள் மாணவர்கள் ஏனைய சிறுவர் சிறுமியர் ஆயிரக்கணக்காக வந்து சேர்ந்து ஒரு வீதியின் இருமருங்கும் கிரையே நின்று தங்கள் மகிழ்ச்சிக் கறிகுறியாக ஆரவாரஞ் செய்தனர்; "தமிழ்த் தலைவர் திரு பொன்னம்பலம் நீடு வாழ்க" என்ற கருத்துப்பட எழுதிய துவசங்கள் பிடிக்கப்பட்டன; நெல்லியடிச் சந்தியில் லார்ட் சோல்பெரி யவர்கள் அங்குள்ளார் வாசித்த உபசரணைப் பத்திரத்தின் பொருட்டும் அவர்கள் செய்த உபசாரத்தின் பொருட்டும் வடமராட்சி மக்களாகிய அவர்களையும் அவர்கள் தலைவராகிய திரு. பொன்னம்பலத்தையும் பாராட்டிப் பேசினர்; அங்கு வந்து கூடிய சனங்களின் வேண்டுகோட்கிணங்கி திரு பொன்னம்பலமவர்களும் சுருக்கமாக விசாரணைக்கர்த்தர்கட்கு நன்றி கூறினர்; பருத்தித்துறைப்பட்டினத்தை விசாரணைக் கர்த்தர்கள் போய்ச் சேர்வதற் கிடையில் மார்க்கத்திலுள்ள ஆவணங்கள் நான்கில் விசாரணைக் கர்த்தர்களும் பரிவாரத்தினரும் உபசரிக்கப்பட்டனர்.

புலோலிச் சைவ ஆங்கில வித்தியாசாலை முனறலிலுள்ள தெருவீதியில், இதற்கென முந்திடே யிடப்பட்டதாகிய அலங்கார ஆவணத்தில் மேற்படி விசாரணைக்கர்த்தர்கள் பெரிதும் உபசரிக்கப்பட்டனர்; அப்பந்தரின் கீழ் வடமராட்சியிலுள்ள பிரபுக்கள் அபிமானிகள் பலர் வந்து முந்தியே குழுமி நின்றனர்; பருத்தித்துறைச் சந்தைக்குச் சமீபமாகவும் ஒரு ஆவணம் இடப்பட்டிருந்தது; அங்கும் கர்த்தர்கள் விசேஷ உபசரணை பெற்றனர்.

விசாரணைக் கர்த்தர்கள் பலவகையான உபசாரங்களுடன் பருத்தித்துறை விடுதிச்சாலைக்கு அழைக்கப்பட்டுச் சென்றபோது அங்கே ஆயிரக்கணக்கான சனங்கள் இடமின்றி எங்குஞ் செறிந்து நின்றனர். மிஸ்ரர் W. M. A உவால்ரன் மேற்படி உபசரணைக் கர்த்தர்கட்கு நன்றி கூறித் தங்கள் கொள்கையையும் எடுத்துக்காட்டியபின், லார்ட் சோல்பெரியவர்கள் தங்களுக்குச் செய்த உபசரணையைப் பாராட்டிப் பேசி தம்மால் இயன்ற வரையில் திரு. பொன்னம்பலமவர்கள் கொள்கையை நிறைவேற்ற முயல்வே னெனவுந் தெரிவித்தனர். பின்னர் திரு. பொன்னம்பலமவர்களும் நன்றிகூறினர்.

ஷை விசாரணைக் கர்த்தர் மத்தியானத்தின்மேல் 2½ மணிவரையிற் பருத்தித்துறையிலிருந்து புறப்பட்டுக் காங்கேயன்துறையை நோக்கிச் செல்லாராயினர். போகும் மார்க்கத்திலே கந்தவனம் வல்வெட்டித்துறை முதலிய இடங்களிலும் ஆவணங்கள் இடப்பட்டிருந்தன. காங்கேயன்துறையை அடைந்தபின் விசாரணைக் கர்த்தர்கள் திரு. ஏ. மகாதேவ, திரு. பொன்னம்பலம், திரு. J. தியாகராசா என்னு மிவர்களும் அங்குள்ள விடுதிச்சாலையில் ஸேர் இராமநாதன் தேவி லீலாவதி யம்மையார் திரு. எஸ். நடேசனென்னு மிருவரும் அளித்த விருந்துண்டனர்.

அதன்பின்னர் மேற்படி விசாரணைச் சங்கத்தினர் காங்கேயன்துறையிலிருந்து புறப்பட்டு மானிப்பாய் 'கிறீன்' வைத்தியசாலையையடைந்தபோது அங்குள்ள அதிகாரிகள் அவர்களை வரவேற்று உபசரித்துத் தங்கள் வைத்தியசாலையைப் பார்க்கச் செய்தனர்; பின்னர் மானிப்பாய்க் கிராமச்சங்கத்தில் திரு. தியாகராசா மேற்படி கர்த்தர்களை உபசரித்துப் பேசியபோது அவர்களுக்கு நன்றி கூறி திரு. ஜி. ஜி. பொன்னம்பலமவர்கள் தொகையிற் குறைந்துள்ளனராகிய தமிழ் மக்கள் முதலிய சாதியினர் பொருட்டு ஆற்றும் தொண்டினையும் பாராட்டிப் பேசினர் பின்னர் மூளாயை நோக்கிச் செல்லும்போது சுழிபுரத்தில் இடப்பட்டதாகிய ஒரு ஆவணத்தின் கீழ்த் தங்கி அங்குள்ளவர்கள் செய்த விண்ணப்பத்தையுங் கேட்டுக்கொண்டு மூளாயை நோக்கிச் செல்வாராயினர்; மூளாய் ஐக்கிய வைத்தியசாலையையடைந்தவுடன், மேற்படி விசாரணைக் கர்த்தர்களுக்கு டாக்டர் எம். ஓ. சாக்கோவும் ஏனைய வைத்திய உத்தியோகத்தர்களும் வரவேற்று உபசரணை செய்தனர். திரு பொன்னம்பலமவர்கள் வைத்தியசாலை அதிகாரிகளை விசாரணைக் கர்த்தர்களுக்கு அறிமுகப்படுத்தினர்; வைத்தியசாலையை அவர்கள் பார்த்தபின் தேநீர் அருந்தினர்; குறித்த வைத்தியசாலையை வைத்து நடத்தும் சங்கத்தின் தலைவராகிய டாக்டர் C. செல்லையா அவ் வைத்தியசாலையின் வரலாற்றையும் இப்பொழுது அது விஷயமாகவுள்ள தேவைகளையும் விசாரணைக் கர்த்தர்கட்கு எடுத்துக் கூறினர்; நேரம் போதாமையினால் ஊர்காவற்றுறைக்குச் செல்லும் ஒழுங்கு தவிர்க்கப்படலாயிற்று. அன்றிரவு 10 மணியளவில் யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில், பட்டினசங்கத் தலைவராகிய திரு. C. பொன்னம்பலம் அளித்த விருந்தை ஏற்றனர்.

பின்னரும் 12 ஜப்பான் கப்பல்கள் ஆழ்த்தப்பட்டன

வாஷிங்டன், மார்ச் 10

வழித்துணையாகச் சென்ற விமானந்தாங்கி, நாசகாரி இவைகள்உள்பட மேலும் 12 ஜப்பானியக் கப்பல்கள் தூரக்கிழக்கு ஜலப் பிரதேசத்தில் ஐக்கிய அமெரிக்க நீர்மூழ்கிகளால் அழுத்தப்பட்டதாகக் கடற்படை இலாகா அறிக்கை கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிஞ்சிப்பாட்டு ஞாபகம்

"அகத்தியர்"

கடைச்சங்கப் புலவருள் தலைசிறந்த மூவருள் ஒருவரான கபிலரால் பாடப்பட்டது குறிஞ்சிப்பாட்டு. அப்பாட்டின் இறுதியில் ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவித்தற்குப் பாடியது என்ற தொடர் எழுதப்பட்டிருக்கிறது. இத்தொடரை யிட்டுத் தமிழ் நாட்டில் பெரிய நாறபாடான கொள்கைகள் ஆராய்ச்சி உலகில் உதயமாயின. ஒரு பண்டிதர் கபிலர் பிரகத்தனுக்கு ஆனு, ஆவன்னு ஈனு எல்லாம் சொல்லிக் கொடுத்த பின்னரே மேற்படி பாட்டைப்பாடிக் காட்டித் தமிழில் உள்ள அழகை விளங்க வைத்தார் என்று எழுதியிருந்தார். இன்னுமொரு பண்டிதரோ வித்துவானோ இல்லை கபிலர் ஆனு ஆவன்னு முதலாயின வெல்லாம் தெரிந்திருந்த ஆரிய அரசனுக்குத் தமிழின் வளத்தைக் காண்பிக்கப் பாடினார் என்று எழுதி முடித்தார்.

ஆனால், குறிஞ்சிப் பாட்டைக் கபிலர் பாடினார் என்பது உண்மை. பிரகத்தனுக்குப் பாடினார் என்பதும் உண்மை. ஆனால் எப்படிப்பட்ட நோக்கத்திலே பாடினார் என்பது விளங்குவதற்குக் கஷ்டமாயிருந்தது. இருக்கிறது.

இற்றைக்குச் சிலவாசங்கட்கு முன் நகர மண்டபத்தில் நடைபெற்ற இழநாட்டுப் புலவர் மன்றத்திற்குப் போயிருந்தோம். ஆனால், நாம் புலவர் அல்லோம் அங்கு வந்திருந்தவர்களும் புலவர் அல்லர் என்பது ஞாபகமாயிருக்கிறது. அங்கே விளையாட்டான சந்தர்ப்பம் ஒன்று நடந்தது.

ஒரு ஆங்கிலம் படித்தவர் எழுந்து தமிழ்பாஷை வறுமையானது அதில் ஆங்கிலத்திலே யுள்ள டல இன்றியமையாத சொற்களுக்குக் கருத்துக் கொடுக்கும் சொற்கள் இல்லை. தொல்காப்பியம் போன்ற பழந்தமிழ் இலக்கணங்கள் தமிழை வளரவிடாது கட்டுப்படுத்த வைத்திருக்கிறது என்று நன்றாகப் பேசக்கூடிய அவர் வீணாகப் பேசினார். அதுமல்லாமல் ஆங்கிலக்கவிகளாகிய பர்ட்ஷேரின் நாடகங்களைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும் என்றும் கூறினார். கிறக.

இவர் மாத்திரந்தான் தமிழுக்கு வளர்க்கத்தடிப் பிடிக்க முனவரல்லை. கொழும்பில் முன்னொரு நாள் ஒரு வைத்தய விவேக தாகூரின் நாடகங்களைத் தமிழில் மொழி பெயருங்கள். தமிழ் ஏய பாஷை எனக் கணிர் விட்டார்.

இன்னுமொருவர், அவர் வெள்ளைக்காரன் அவர் சேக்ஸ்பியரின் நாடகங்களை மொழிபெயருங்கள் அப்போதான் தமிழ் வளம்பெறும் என்று ஆலோசனை கூறினார். இவர் இலவகட்டல்லைச் சூடுக தலைவர்.

இனி, இவர்களுள் ஆங்கில பாஷைகளைத் தமிழில் சொல்ல முடியாதென்றார் ஒருவர். தகுதி நாம் கேட்கிறோம். பெரியப்பா, சித்தப்பா, அம்மான், என்ற வித்தியாசமுள்ள மூன்றையும் ஒரே படியாக 'அங்கிள்' என்று ஆங்கிலத்தில் வழங்குகின்றார்களே. ஏன்!

இனித் தொல்காப்பியம் தமிழரின் பலவாபிவிருத்திகளுக்கும் இடங்கொடுக்கவில்லை. அது ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் செய்யப்பட்டதாயினும், அது இன்றைக்கும் எழுதக்கூடிய புதுமாதிரியான இலக்கியங்களுக்கு இடம் அமைத்துக்கொடுக்கிறது. அவ்வளவுக்கு வருந்து என்று பெயர். வருது என்றால் புதுமை என்பது பொருள். ஆனபடியால் பர்ட்ஷேரின் நாடகங்களை மொழிபெயர்க்கவேண்டும்; தாகூரின் நாடகங்களையும், சேக்ஸ்பியரின் நாடகங்களையும், எங்கள் புலவர் மன்ற நாடகங்களையும் தொல்காப்பியம் ஏற்றுக்கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை. அன்றியும் பிற்காலத்தில் எழுந்த தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களையும் தொல்காப்பியம் ஏற்றுக் கொள்ளுகின்றது.

புலவர் மன்றத்தில் நடந்த நாடகத்தைப் பார்த்த பிறகுதான் கபிலர் குறிஞ்சிப் பாட்டை எப்போ பாடினார் என்ன பாடினார் என்று விளங்குகிறது. பிரகத்தன் ஆரியனாக இருந்தாலும், மேலே நாம் சொன்ன தமிழ் பிரகத்தனைப் போலத் தமிழ் வறுமையானது எனக் கண்ணீர் விட்ட பொழுதுதான் குறிஞ்சிப்பாட்டினைக் கபிலர் பாடினார் என்னும் உண்மை வெளியாகின்றது.

கபிலர், பெருங் குறிஞ்சியைப் பாடிய பின்னர், பிரகத்தன் தமிழில் ஆர்வங்கொண்டு அதில் பெரிய செய்யுளும் செய்திருக்கிறான்; கதைகளிலே அவனுடைய செய்யுளும் இன்று காணப்படுகிறது.

இனி, தனியத் தமிழ் படித்தவர் அதனை ஒக்காலத்தில் வளர்க்க முடியாது. தென்னாட்டியலிலே சிறந்த தமிழறிஞர்கள் என்று விரல்மடித்து எண்ணப்படக்கூடியவர்கள் எம் ஏ, எம் எல், பி ஏ, பி எல் போன்ற பட்டம் பெற்றவர்கள். அதுபோல ஆழத்தலுட உளவர்கள் ஆங்கிலத்தில் உலவ முயலாது தமிழை வளர்ப்பதற்கு ஆங்கிலம் கற்றவர்களின் உதவியை நாடவேண்டும். ஆங்கிலம் மாத்திரமல்ல பிற பாஷைகளும் கற்ற மேலையோர்களையும் மேற்கொண்டு ஆலோசிக்க வேண்டும். வெறும் பரதநாகூறு மெட்டுக்களையுடன சனனதம ஆ[illegible]

உயர்திரு இராவ்பகதூர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் படத் திறப்புவிழா

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஈழநாட்டு இளைஞர்கழகச் சார்பில் தமிழ்ப்பெரு மகனின் உருவப் படத்தினை, சென்னை மேரி ராணியார் கல்லூரிப் பேராசிரியை செல்வி ஈ. த. இராஜேசுவரி அம்மாள் M A., L T. அவர்கள் 25-2-45 ஞாயிறு மாலை 5 மணியளவில் பட்டமளிப்பு மன்றத்தில் திறந்து வைத்தனர். துணைவேந்தர் அவர்கள் டிலலிமாநகர்சென்றிருந்தமையால் மகாமகோபாத்தியாய முதுபெரும்புலவர் பண்டிதமணி உயர்திரு. மு. கதிரேசச்செட்டியார் அவர்கள் தலைமைதாங்க 'பிள்ளை அவர்களின் தமிழ்த் தொண்டுகளை விரித்துரைத்தனர். படத்தினைத் திறந்து வைத்துமுன அம்மையார் அவர்கள் 'பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை கேட்போர் உளங்கொள்ள விரித்துரைத்தனர். பின்னர் தமிழ்ப் பேராசிரியர் புலவர் உயர்திரு. செ. பொ. மீனாட்சி சுந்தரனார் M A, BL M. O L, அவர்கள் 'வருங்கால இலங்கை'யைப்பற்றி அரியதோர் சொற்பொழிவாற்றினர், ஈற்றில் துணைவேந்தர், தலைவர், திறப்பாளர், சொற்பொழிவாளர் முதலானோர்க்கும், படத்திறப்புக்குப் பேருதவி புரிந்த இழகேசரிப பத்திராதிபர் அவர்களுக்கும், வாழ்த்துரைகளனுப்பிய பேரறிஞர்கள் எல்லோருக்கும் நன்றி கூறப்பட்டது. மாலை 7-30 மணிக்கு விழா இனிது நிறைவெய்தியது. இரவு 8 மணி முதல 12 மணியளவு ஈறுதல மாணவர்கள் இனனிசை விருந்தளித்தனர்.

சி. ஆறுமுகம்,
அமைச்சன்.

தேவர்கள்போற்றும் திருத்தில்லைஸ்தலம்

[ம ஆனந்தசிவம்]

பண்ணவர் பணிந்துவதியும் பாரதநாட்டிற் பலசிவஸ்தலங்களி நப்பினும் "கோயில்" என்னும் சிறப்புப்பெயர் பூண்டுள்ளதாகிய சிதம்பரஸ்தலமே எவற்றினும் மேன்மைபுடைத்து என்பது அறிநூல் ஆராய்ந்த ஆன்றோர்களின் அற்புத கோக்காகும்.

மேற்கூறிய சிவஸ்தலம் புண்ணிய பூமியாகிய பாரதநாட்டில், காவேரி யாற்றின் தென்திசத்தி லிருக்கிறது. சிவபிரானுடைய ஆயிரத்தெட்டு சிவஸ்தலங்களினும், தலைசிறந்துவிளங்குவதும், வேண்டுவார் வேண்டுவதனை ஈந்து அவர்தம் ஆணவமலங்களை அறவே பொழிப்பதும் இந்தச்சிவபதியேயாகும். அன்றியும் அன்னார்க்குச் சிவலோகப்பிராப்தியைக் கொடுப்பதும் இதுதெய்வீக சபாபேபாகும்.

அன்றியும், நம்மை ஆண்டு அடிமை கொண்டருளுபவராகிய எம்பிரான் லிங்கமூர்த்தங் கொண்டருளிய ஸ்தலங்கள் பல இருப்பினும், அவற்றுட் பஞ்சலிங்கங்கள் என்று ஆன்றோர்பகர்ந்துள ஐந்து ஸ்தலங்களே மிகப் பிரபலமடைந்தவை. மேற்கூறிய இவ்வைந்து சிவ ஸ்தலங்களினும் ஆகாயலிங்கத்தையுடையதும், பசும்பொன்னாலாய மனறத்தினகண்கிறு திருநிருத்தஞ் செய்கின்றதை உடையதுமாகிய இத்தில்லைப்பலதே சிறப்புடையதாய மிளிர்கின்றது.

இத்தில்லைப்பலபானது முற்காலத்தில் "தில்லைவனம்" என்ற பெயரையுடையதாய் மிகவும் அபாயமான இடமாயிருந்தது. காலாகாலத்தில் அது பொன்னி நாடனும் சோழமன்னன் ஒருவனால், சீர்திருத்தப்பெற்று ஓர் பதி என்ற பெயரால் நிலவுக் வந்தது. அப்போது எம்பிரானும் ஆங்கு ஓர் ஆகாயவிநகரும்மாய்உதித்தெழுந்தார். எமது ஈஸ்வரன் இவ்விடத்திற் றுன்றோன்றியானமையே இத்துக்கிடும் மஹாத்மியமாக விளங்கவற்றிற்கும் விச்சடகாரணம்.

சில அறிவாளர்கள் இந்த ஸ்தலத்தை, பதஞ்சலி, வியாக்கிரபாதர் என்ற இரு முனி சிரேஷ்டர்களாலும் பூசிக்கப்பெற்ற இடம்என்றும் கூறுகின்றனர். கற்! இந்த சிவஸ்தலத்தை இவ்வளவு மேன்மை புடையதாய், பார்ப்போருள்ளம் பரவசமடையும் தன்மையதாய இருக்கும்படி செய்வித்தவன் "பாரங்கன்" எனனும் சோழமன்னனாவான். இவன் "கனகசபையை" ஏறபடுத்தி ஆனபுறம் ஒரு தாரகையால் "பொன்வேயுமாறு பாரங்கன்" எனனும் காரணப்பெயரையும் பெறுகிறான்.

"காசியி லிறக்கமுற்றி
கமலையிற் பிறக்கமுற்றி
தேசிகாஞ் சிதமபரத்தைத
தரிசிக்கமுற்ற"

என்னும் ஆன்றோர் கூற்றிலுள்ள ஈற்றடியை நாம் உணர்ந்து நோக்கினால் அப்பதியின் மஹாத்மியம் தெள்ளிதிற் புலனாகும். அல்லாமலும் நமது இசைக தனது பஞ்சகிருத்தியங்களையுஞ் செய்தற்குக் காரணமாயுள்ள ஆனந்தத தாண்டவத்தைத் தரிசிக்கப் போலி மனிதர்களாகிய எங்கட்கு எத்தனை தவம் வேண்டுமோ! என்செயவாம் ஆப்பரமபதியாகிய நம் பலவாண்ண திருநிருத்தத்தைத் தரிசிக்க அருகதையற்றவர்களானோம்.

"சிவசிதம்பரம்" என்று நமது ஒரு நாவால் ஒருமுறை சொல்லத்தானும் நாம் எத்தனையோ புண்ணியங்கள் ஈர்வீகத்திற் புணணிபிருத்தல் வேண்டும். "அவனருளாலே அவனாரு வணங்க" என்ற மணிவாசகரின் வாக்கினை [illegible] அவர்தி அருட்திரு [illegible] அவருடைய பாதத்தையே சதா தியானஞ் செய்துவரல் வேண்டும்.

"காலில் நகம்முளைத்த கால்முதலா யுன்னைக்
கருத்தினில் நினைந்துவந்தேன்."

என்ற அறபத்துமூவரி லொருவராகிய திருநாளைப்போவார்புலம்பி அழுது இருக்கின்றார். அன்றியும் அவரே ஒருமுறை எம்பிரான் சந்நிதி வாசலில் நின்று,

"காசினியி லிதைக்கைலை யென்
றெல்லோரும்
பேசக் கேட்டதேயன்றிப் பேணிப்
பார்த்திலனே"

என்று உள்ளம் உருக, ஆனந்த பாஷ்பம் கண்களிலரும்பி வடிய, அழுது வணங்கி யிருக்கின்றார். இன்னும் அதன் தெய்வீக அம்சங்களை எடுத்துரைக்க, புல்லறிவாளர்களாகிய எம்மனோரால் இயலுமா?

அவர் தமது செந்தாமரையன்ன திருவடிகளைத் தூக்கித் தாண்டவமாடும்போது அந்த கிகழுங் காட்சிகளதா னென்னே! ஆகா! பூலோக கைலாசம் என்று கூறுவதற்கு யாதேனும் இழுக்கும் உண்டா? இல்லையே இல்லை. ஆப்பெருமான்றன அளப்பிலாட்டமும், ஆடலசத்திற்கு அன்னதுமபுத காதர்களிய பக்க வாத்தியப் பணணிரைகளும், சகல சிவராசிகளினதும உளளங்களையும் அவர்தம் அருட் திருவுருவ கினைகதொழ இசைகும் எனபதில் ஒரு சிறிதாயினும் ஐயமேயின்று. தேவர்களே விரும்பி அவருடைய திருநிருத்தத்தைத் தரிசிக்க விரும்பி வருவார்களானால் அவர்தம் ஆட்ட மகிமையைச் சொல்லவும் வேண்டுமா? கடைத்தற்கரிய மாசிலாமணியல்லவா? ஆங்கு உறையும் பக்தர்களின் ஹர, ஹர என்ற ஒலியும், ஏனையோருடைய கீத இனனிசைகளும் நமமை ஆனந்தசாகரத்தின் அழுந்தும எனபதற்குத் துணையாவதாயும ஐயமின்று. இனனும் அங்குள்ள முத்தி, தலம், தீர்த்தம் ஆகிய முப்பெருமைகளையும் எடுத்துரைக்கின் ஆரம்ப காலமுடைய ஆதி சேஷனாலும் முடியாதனவின, அறப அறிவுடைய ஆனாருக்கு எனனால் முடியுமா?

ஆகவே, மானவர்களாகிய நாங்களும், அறிவுறுத்தும் ஆசிரிய சிலர்களும் ஏனைய சிவதொண்டர்களும், அவர்தன் னுடைய மகிமையை விழிகள் குளிரக் கண்டு தரிசித்து எமது மலபாச பந்தங்களை நீத்து, சிவசம்பந்தமுடையராய்த் தழை, ஆச் சபாபதியின் தருவருளை நாடுவோமாக,

சேலம் பீடி

யாழ்ப்பாணத்திற்கென்று
விசேஷமாக
சேலத்தில் தயார்செய்த
'பூக்கூடை மார்க்கு'
பீடிகள் தற்சமயம் வந்திருக்கிறது.
இந்தபீடி மணத்தாலும்
குணத்தாலும் மேலானது.
சேலத்தில் தயாராகும் பீடிகளில்
முதனமையானது
எங்கும் எல்லா வியாபாரிகளிடமும்
பெற்றுக்கொள்ளலாம்.
ஒருமுறை வாங்கி உபயோகித்துப் பாருங்கள
சிலோன் ஏஜண்ட்:
C S. நடராஜா செட்டியார்,
41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
Mis 1-3 to 3-7-45

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியும் தமிழகமும்

வித்துவான், பண்டிதர்,
திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள், B. O. L.

கொழும்புத் தமிழ்க் கழகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

(முற்றொடர்)

ஆசிரியர்கள்

கண்போன்ற கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இன்றியமையாத ஆற்றல்களையும் குணவியல்புகளையும் வரையறை செய்தனர். இவற்றால் இக்காலக் கல்விநூலறிஞர் கூறுவன உரவும் அடங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

அவையாவன:

1. நற்குடிப் பிறப்பு
2. தூய்மை
3. ஒழுக்கம்
4. கல்வி
5. வாய்மை
6. குறையாத அன்பு
7. விருப்பில் உளம்
8. நடுவுநிலைமை
9. உலகியலறிவு
10. நிலைஇய தோற்றம்
11. பொறை
12. நிறை
13. மறதியின்மை
14. அறிவு
15. உரு
16. ஆற்றல்
17. புகழ்
18. சட்டுரைவன்மை
19. மாணவரால் விரும்பப்படுதல்

மேலும், நலலாசிரியர்களுக்கு அவர்களின் தோற்றம், அறிவு, பெருமை, நடுநிலை, முகமலர்ச்சி கற்பிக்குமாறறல் முதலியவற்றில் நிலம், மலை, நிறைகோல், மலர் என்பவற்றை உவமானமாகக் கூறியுளர். "குரு எப்படிச் சீடனுமப்படி" எனும் உண்மையைத் தமிழ்மக்கள் நன்கறிந்தொழுகினர். இதனால் ஆசிரியர்களுடைய இயலபுகளை மாதிரமன்றி ஆசிரியராகத் தகுதியறறவர்களி னிலக்கணங்களையும நகைராய்ந்து எடுத்துக் கூறியுளர். இஃதொன்றே அக்காலத்தல தமிழ்மகள ஆசிரியத்தொழலை எவ்வாறு போற்றி மதித்தனர் என்பதை நன்கு புலப்படுத்தும். பாடஞ் சொலலும ஆற்றலனையும், இழுக்குணமும், அழுகாறும, ஆசையும், வஞ்சகமும, ஆசிய உண்டாகப்பேசுதலும் எழறகுட்ப, முடத்தெங்கு பருதிகளுடிகை, பட்டபனை எனும் மரங்களையும் ஒத்த மாமுடாடிகளோடைகிறதையும் உடையவர்கள் அக்காலத்தல ஆசிரியர்களாகத தொழலாறறவிலலை, தக்க முறையாகக் கறபிக்கத தெரியாதவர்களையும் இலகுவில விளக்க முடியாதவர்களையும், மாணவர்களை சொளளும் ஏளவறந்து படிபிக்க முடியாதவர்களையும் எழறகுட்ப, பருத்தக்குணடிலக முதலியவறறோடைப பிட்டுப் பழித்தனர்கள்.

மாணக்கர்கள்

கட்டாயக் கல்வியின்பின் உயர்தர கல்வியைக் கற்றற்குரிய மாணவர்களைத் தெரிந்தெடுத்தலே கற்பித்தனர். அறிவும ஒழுக்கமும நோயின்மையும் விவேகமும இததெரிவிற் காதாரமாக காணப்படுகன்றன. சோமபல, குடி, சோபம, காமம, கவவு, நேரய், பயம், அகங்காரம, கதத்தரை, பாவம், வஞ்சகம, நுலுசகு அஞ்சித் தடுமாறுதல முதலியவறறை உடையவர்கள சுமாரத நூறறகலலயக கறகத தகுதியறறவர்களாகக் கருதப்பட்டனர். ஆசிரியருடையமகன், ஆசானமகன், பெரும பொருள கொடுத்தான், எழிட்டுத தொண்டு புரிவோன, பேரறவுடையோல முதலியோர்களே அதகடாகக கறாத தேர்ந்து வளங்கனர்.

இக்காலத்தில் மாணவர்களை அவர்களின் அறிவு கேர்ச்சி முதலியவற்றிற்கேற்ப A B C D E என ஐந்து பிரிவாகப் (Categoris) பிரிக்கின்றனர். தமிழகத்தில் அக்காலத்தில் மூன்று பிரிவாகவே பிரித்தனர். A ப் பிரிவை முதல் மாணக்கர் என்றனர். B யும் C யும் இடைமாணக்கர்; D யும் E யும் கடைமாணக்கர்.

முதல் மாணக்கர் தீயவற்றை நீக்கி நல்லவற்றைத தெரிந்து கற்றலிலும் (Choice of values) கற்றவற்றை மீட்டுப் பதித்தலிலும் (Fixation) சிறந்து விளங்கினர். இவர்களை நீரிலிருந்து பாலைப்பிரித்துண்ணும் அன்னகதற்குமு, மிகுந்த புல்லைக் கண்டவுடன மேயந்து சேர்த்துவைததுப் பின இரைமீட்கும் பசுவிறகும் ஒப்பிட்டனர்:-

இடை மாணக்கர் ஆசிரியர் வருந்திக் கற்பிப்பவறறை மாதிரம் அறியும் ஆறறலுடையவர்கள். இவர்களுக்கு 'பாட்டுக்குத் தக்க பலனைத்தரும்' நிலத்தையும் சொன்னதைச் சொல்லும் கிளியையும் உவமானமாகக் கூறினர்.

கடை மாணக்கர்களுக்குப் பொள்ளற்குடத்தையும ஆட்டையும், எருமையையும், பன்னடையையும்ஒப்பிட்டார்கள். பொளளற்குடம் நீரைவார்க்குந்தோறும் ஒழுக விடுதல் போலக் கடைமாணக்கர் நூறபொருளைக் கறபிக்குந்தோறும் மறந்துவிடுதலாலும், ஆடு ஒரு செடியிலே தழை நிறைந்திருந்தாலும் வயிறுநிறைய மேயாது செடிதோறும்போய் மேய்தல்போலக் கடைமாணக்கர் ஓராசிரியரிடத்து மிகுந்த கலவியிருந்தாலும் புலனமை நிறையக் கற்றுக்கொள்ளாது பலரிடத்தும் போய்ப் பாடங் கேட்டலாலும், எருமை குளத்துநீரைக் கலக்கிக் குடித்தல்போல கடைமாணக்கர் ஆசிரியன் வருந்தப் பாடங்கேட்டலாலும், பன்னடை, தேன முதலியவறறைக் கீழே விட்டு அவறறிலுளள குற்றங்களைப் பறறிக்கொளளுதல் போலக் கடைமாணக்கர் நலல பொருளை மறந்து வடுத தீயபொருளைச் சிந்தித்து பறறிக்கொளளுதலாலும் அவருக்கு அமைன்ன உவமானமாதலறிக.

கற்பித்தல் முறைகள் (Methods of Teaching)

மாணவர்களிருந்து கற்றற்கு நல்ல சூழலைச் செரிதலும் பாடங்கள் கற்றற்குரிய பொருத்தமான நோக்கத்தைக் குறித்தலும் ஆசிரியர்களுக் கின்றியமையாதனவாகக் கொளளப்பட்டன. ஆசிரியர்கள் சடவுட்பக்தியுடையவர்களாக மாத்திரம இருத்தல் சாலாது. படிப்பிக்கத தொடங்கும் பொழுதும் தாம் வழிபடுங் கடவுளை வணகித் தொடங்கவேண்டும் எனும ஒழுங்குமுறை அக்காலத்தல் சமுதாயடங்கும பரந்து காணப்பட்டது. கல்வியின முறற முடிந்தபின அறிவைப்பெற்ற அறிவுருவாகிய—ஞான ஒளியாகிய கடவுளை வணங்கலும் வணங்க அவளாயமைதலும் என்பதை வறுகுகைகாணடு மகன, ஒவ்வையக கறபசகும்ஆசிரியர்கள தங்கள பாடங்களைக் கறபிக்கத தொடங்கும் பொழுது கடவுள வணகததுடன தொடங்க வேண்டு மெனபதை வறபுறுததபதல ஒரு புதுமையுமிறறன்றோ? இக்காலக் கலவிநூலறிஞரும ஆசிரியர்களும இஃதைச் சமதுகரதத்தான் மெய்வாரிகளாக. அக்காலத்தல ஆசிரியர்கள பாடசகுறபுகளை எழுதினர்கள். இக்காலத்தற போல வததயாதரிசுகளுக்கு [illegible] திலில் சிலவற்றைக் 'கிறுக்கி'விட்டுச் தாம் விரும்பியவற்றை அவர்கள் கற்பிக்கவில்லை. அவர்கள் மனத்தில் நிறைய எழுதி முறையாகக் கற்பித்தார்கள். 'உரைக்கப்படும் பொருளை உளத்தமைத்தார்கள்.' இன்முகமும், நன்மனமும் உடையவர்களாய், மாணவர்களின் முன்னறிவு, கொள்ளுந் திறன் முதலியவற்றை அறிந்து அவரவர்களுக்குத் தக்கதாக விரையாதும் கோபிக்காதும் கற்பித்தனர்.

கற்றல் முறைகள் (Methods of Learning)

இக்காலத்தில் கேபாட், பெறேறு முதலிய கல்வி நூலறிஞர்கள் கற்றலைப் பலபடிகளாகப் Phases பிரித்து விளக்கியுளர். இவற்றன தேடல், வதித்தல், பிரயோகித்தல் எனும் மூப்படிக் கற்றலே தமிழ்நாட்டிற் சிறந்து விளங்கிய து. மாணவர்கள் கற்கும் பாடங்களில ஆவமுடையவர்களாய் மன ஒருமைப்பாட்டுடன் கற்றனர். கற்றவறறைப் பதித்தற்கு மீட்டலையும் (Repelition) ஒழுங்குபடுத்தலையுமே (Organisation) மேறகொண்டனர். மீட்டலைப் பாடம் போறறல் என்றனர். ஒழுங்குபடுததலை உடன் மாணவருடன் கலந்துரையாடுதல் வினாதல், விடையிறத்தல முதலிய வற்றாற் பெற்றனர். உண்மைப் பிரயோகம் (Reil application) அவர்களுடைய வாழ்வலேயே காணப்பட்டது.

இக்காலத்தில் இன்றியமையாத சிறந்த பரீகஷயெனக் கருதப்படும புதுப் பரீகஷகள் Objective tests) அக்காலத்திலும் இன்றியமையாதனவெனக் கருதப்பட்டன. இவற்றைப் பெருபாலும் "வினாதல் வினாவை விடுத்தல்" என்பவறறால் நிகழ்த்தினர்.

ஆசிரியர் கற்பித்தவற்றை நிறையக் கறறாலும் ஒரு மாணவன் கற்பங்குகுமேல் பற்றிக்கொள்ள முடியாதெனவும், கற்கும் மாணவர்களுடன் பயில்வதால் இனனொரு கறபங்கு பெறலாமெனவும் அறிந்திருந்தனர். மிகுதி அரைப்பங்கும் கற்பிப்பதாலும் சபைகளில் சொற்பொழிவு செய்வதாலும் நிரம்பும் எனவும் கூறபபட்டுளது. ஒரு நாட்டிலுளள அறிஞர்களுள ஆசிரியர்களே — விரிவுரையாளர்களே—நிரம்பிய கல்வி உடையவர்கள் என்பதைப் பழந் தமிழ்மக்கள் நன்கறிந்திருந்தனர். அதனாலேயே அவர்கள "எழுத்தறிவித்தவன இறைவனாகுய" என ஆசிரியர்களை போறறிச் சிறப்புச் செய்தனர். இவவுண்மையை இக்கால மக்கள் அறிந்தொழுகுதல் இனறியமையாதது.

ஒருநூலை அல்லது பாடத்தை ஒரு முறை ஆசிரியரிடம் கறறவன் இரு முறை கேட்டானுயின அதில் 'பிழைபடுதல்' இலனாவன் எனவும், 'மக்காற் கேட்பின் முறையறிந்து பிறறுக்கு உரைப்பான்' எனவும் அறிந்தொழுகினர்.

ஒழுங்கு முறை (Disci pline)

இக்காலக் கல்வியுலதில் ஒழுங்கு முறையைப்பற்றிய பல்வேறு அபிப்பிராயங்கள காணப்படுகின்றன. ஆசிரியருக்கும மாணவருக்குமுளள தொடர்பு, மாணவரின சுயாதீனம், மாணவர்கள ஆசிரியருக்குக் கட்டுப்படவேணடிய அளவு எனும விஷயற்றப்பற்றிய—கருத்துக்கள நல ஒனறோடொனறு முரணபடடனவாகக் காணபடுகின்றன. தமிழநாடடில மாணவர்கள ஆசிரியர்களிடததில அனபும மதிப்பும உளளவர்களாக நடந்தார்கள. ஆசிரியருடைய குணநலனோடு பழகுவருடைய குறறபறறி ஒழுகுவார்கள. ஆசிரியரைத் தம ஒழுக்கத்தல மகழவததல தம கடமையெனக் எணணுவார்கள. குரு கடபடனவாவது [illegible] விடடு நீகாமலும் நெருங்காமலும் இருக்கின்றானோ அதுபோல ஆசிரியனை நெருங்காமலும், விடடுப் பிரியாதும் வாழ்ந்தனர், சுருங்கக் கூறின் ஆசிரியருடைய நிழலைபோல நீகாது உறைந்தனர் எனலாம்.

மாணவர்களின் மனத்தைப்பயிற்றி நல்வழிப்படுத்துவதற்குக்கட்டுப்பாடு இன்றியமையாதது. இஃதின்றேல மாணவர்கள நலல பயிற்சியும் சிலமும் உடையவர்களாக முடியாது. ஆனாலும ஆககாலததில ஆசிரியர்கள் மாணவர்களைத் தம அன்பினாலும் ஒழுக்க முறையினாலும் கட்டுப்படுததி நன்னெறிப்படுத்தினர். இக்காலத்தில் 'பிரமபை'ப்போல் அக்காலததில ஆசிரியருடைய ஒழுக்கம் விளங்கற்று. எல்லாப் பெயவ குணங்களுமமைந்து செம்மை வழிகளில நடக்கும ஆசிரியரிடம கற்குமமாணவர்கள், தம ஆசிரியரைப்போல தாமும் ஒழுக முயல்வார்களனறோ? (வரும்)

திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

செவ்வாய் மார்ச் 13

காலை 7.45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 சுப்ரமணி 8.15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 எம் கே நடராஜய்யர், டி ஏ சாமி பாட்டு 9 முடிவு

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எம் பசுபதியாபிள்ளை பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்விஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 எம் கே நடராஜய்யர், டி ஏ சாமி பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 தாளவாத்யக் கச்சேரி 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7.15 நாமும் யுத்தமும் 7-30 அறிவிப்புகள் 7.35 கெட்டுப்போன ஞாபகம் நாடகம் 7.45 தமிழில் செய்திகள் 8 மதராவில் உள்ளபடி 9 வி சுந்தரேசன் வயலின் 9 20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-20 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 விநாதர் ஜலதரங்கம் 10 இசைவேளை † 10.30 முடிவு.

புதன் மார்ச் 14

காலை 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 சக்குபாய் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள 8-30 கே தங்கம்மா பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 கே தங்கம்மா பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 கல்வி ஒலிபரப் 2-30 முடிவு.

மாலை 5 பி கே விசுவநாத சர்மா வயலின் 5-40 இசைப்பயிற்சி 6 கே எஸ் திருவேங்கடம் ஐயங்கார் பாட்டு 6.30 ஆங்கிலத்தில் செய்திகள் 6.40 கிராம நிகழ்ச்சிகள் 7 15 செம்மை வைத்தியநாத பாகவதர் † 7-30 அறிவிப்புகள் 7.35 வாணொலி வாத்யக் கோஷ்டி 7-45 தமிழில் செய்திகள் 8 நமது தபால்பெட்டி 8.15 பி கே விசுவநாத சர்மா வயலின் 8-45 கே எஸ் திருவேங்கடம் ஐயங்கார் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 வெல்லப் புறப்படுவோம் 10 ஆரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு.

வியாழன் மார்ச் 15

காலை 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 ராமநாதக கீர்த்தனைகள் † 8.15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 கே கௌரி அம்மாள் வீணை, பாட்டு 9 முடிவு

12.0 கதம்பம் † 1-20 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பி ஆர் ராமானுஜம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 கே கௌரி அம்மாள் வீணை, பாட்டு 5 40 இசைப் பயிற்சி 6 பி ஆர் ராமானுஜம் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 சட்டவாம்பு 7-30 அறிவிப்புகள் 7-35 திடீர்ப் பிரயாணம் 7.45 தமிழில் செய்திகள் 8 தஞ்சாவூர் கே பொன்னையாபிள்ளை பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 ஆர் நாராசன் வயலின் 10 இசைவேளை 10-30 முடிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லட்சுமிகாந்தம் கொலை விசாரணை

6-ம் பக்கத் தொடர்ச்சி

டர்ந்து விசாரிக்கப்பட்டபோது தெரிவித்தார்,

சாக்ஷி அடையாளம் கண்டு ஒப்புக்கொண்ட பத்திரிகைகள் இவ்வழக்கில் வக்கீல் நற்குணம், சுமலநாதன் முதலியோர் விசாரணையின்போது தாக்கல் செய்யப்பட்டவைகளே. அவைகளிலுள்ள விஷயங்கள் பாகவதர், கிருஷ்ணன், ஸ்ரீராமுலு நாயுடு முதலியோரை அநேகமாகச் சமயந்தப்படுத்தியவைகளாக இருந்தன. குறிப்பிடப்பட்டிருக்கிறவைகளை சாக்ஷி பார்த்து ஒப்புக்கொண்ட பிறகு அவைகள் எக்ஸிபிட்டாக்கப்பட்டன.

இப் பத்திரிகையின் கொள்கை சமூக சீர்திருத்தம், பெண்கள் முன்னேற்றம் எனைதாகவும் சாக்ஷி கூறினார். சாக்ஷி மேலும் கூறியதாவது:

'சுமலநாதனை எனக்குத் தெரியும். அவர் அநேகமாக நகர ஏஜண்டராக இருந்து பத்திரிகை விற்று வந்தார். லக்ஷிமிகாந்தத்திடமிருந்து கையெழுத்துப்பிரதிகளை சாக்ஷிகொண்டுவந்து சுமலசமயம் எனனிடம கொடுபபதுண்டு'.

வனமாலி அச்சுநிலைய சொந்தக்காரர் சாட்சியம்

இடைக் காலத்திற்குப் பிறகு வனமாலி அச்சு நிலையத்தின் சொந்தக்காரர் சி. டி. சோதண்டபாணி விசாரிக்கப்பட்டார்.

இச்சாட்சியமும் இவ் வழக்கிற்குச் சம்பந்தப்படாததெனறு திரு. டி. எஸ். கஸ்தூரி ஆட்சேபத்தைக் கொண்டு வந்தார், 'உட்லண்ட்' சம்பவம் பற்றிநீதிபதியின் முடிவு கவனிக்கப்படுமென நீதிபதி பதில் அளித்தார்:

சாக்ஷி கூறியதாவது:—

புரசைவாக்கம் 10 சுப்பிரமணிய முதலி தெருவில் நான் வனமாலி அச்சுக்கூடம் வைத்திருக்கிறேன்: அது என் வீடு: லக்ஷ்மிகாந்தத்தை சினிமா தூதுவைப் பிரசுரிக்க வந்தபோது பார்த்தேன்: சினிமா தூதை வனவனமாலி அச்சு நிலையதில் லக்ஷ்மிகாந்தம் ஆசிரியராக இருந்து நடத்தி வந்தார். நான் பிரசுரித்து வந்தேன்.

சினிமாதூது பிரசுரமாகி வந்தபோது இரவு 9 30 மணிக்கு பின்புறம் (10 சுப்பிரமணிய தெரு வீடு) வீட்டில் வெள்ளிக்கிழமை 21-11-44 இல் லக்ஷ்மிகாந்தமும் நானும் பேசிக்கொண்டிருந்தோம்: அவர் எனக்குப் பணம் கொடுக்க வந்திருந்தார்:

அப்பொழுது 20 பேர்கள் திடீரென உள்ளே புகுந்தனர்: லக்ஷ்மிகாந்தம் என் எதிரில் உட்கார்ந்திருந்தார். அச்சுநிலையம் எங்கே எங்கே? என்று கேட்டுக்கொண்டு வந்தனர்: அச்சுநிலையம் மூடப்பட்டிருக்கும் அது வெளிப்புறத்தில் இருக்கிறது: போய்ப்பாருங்கள என்று லக்ஷ்மிகாந்தம் சொல்லி அனுப்பினார்:

'லக்ஷ்மிகாந்தம் என்னைப் பிறகு உள்ளே மேல மாடிக்கு அழைத்துக் கொண்டுபோய்விட்டார்: பிராமணர்கள வசிக்கும் இடத்திற்கு உள்ளே வந்த 20 பேர்கள் சென்றது தெரிந்தது பிறகு என்ன நடந்தது என்பதை நான் பார்க்க வில்லை:

பிறகு கதவு உடைப்பது திறப்பது போன்ற சத்தம் கேட்டது: அப்பொழுது பொங்கல் மலர் பிரசுரிக்கப்பட்டு வந்தது: உள்ளே புகுந்தவர்கள் பாரத்தை உடைத்து உள்ளே யிருந்த பத்திரிகைகளை இறைத்து அங்கிருந்த 'டைப்ரைட்டரை அழித்து விட்டுச் சென்றனர் என்பதைப் பிறகு செல்லும் போது கண்டேன்.

கேள்வி:- அதற்குப்பின் கம்போஸான சமாசாரம் ஏதாவது இருந்ததா?—அவைகளைத்தான் அவர்கள் அழித்தனர்: லக்ஷ்மிகாந்தமும் நானும் பயந்துகொண்டு வெளியே வராமல் இருந்தோம்: அன்றிரவே நானும் லட்சுமிகாந்தமும் அழிக்கப்பட்டிருந்த விஷயத்தைப் பார்த்தோம்: உடனே வக்கீல் திரு: நற்குணத்துடன் பொலிஸாரில் முறைப்பாடு செய்யப்பட்டது,

'சினிமா தூது'வில் பிரசுரகர்த்தா என, போட்டிருப்பதுதான் எனச் சாட்சி கூறினார்:

26-11-43 இல் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை சாட்சிக்குக் கொடுக்கப்பட்டது: அதிலுள்ள விஷயங்களின் கையெழுத்துப் பிரதியை லட்சுமிகாந்தம் எனக்கு அனுப்பி இருந்தார்; அதை நான் படித்துப்பார்த்த பிறகு பிரசுரத்திற்கு அனுப்பினேன்: லட்சுமிகாந்தம் கையெழுத்தில்தான் அது எழுதப்பட்டிருந்தது. 10-12-43 பத்திரிகை பக்கங்கள் 46, 11 ஐ பிரசுரங்கள்? சாக்ஷி அவைகளைப் பார்த்தார்; அவைகளை லக்ஷ்மிகாந்தம்தான் எழுதினார் என்று சாக்ஷி கூறினார்.

24-12-43 பத்திரிகைப் பக்கம் 11, 7-1-44 பத்திரிகைப்பக்கங்கள்24, 11, 14-1 44 பத்திரிகை பக்கங்கள் 5, 9, 10. 21 1-44 பத்திரிகைப் பக்கங்கள் 2, 3, 4 6. சாக்ஷிக்கு காட்டப்பட்டன; இவைகளை சாக்ஷி பார்த்து விஷயங்களை கையால் எழுதி லக்ஷ்மிகாந்தம் அனுப்பினார் என்று சாட்சி ஒப்புக்கொண்டார். இவைகள தாக்கல் செய்யப்பட்டன.

கேள்வி:- லட்சுமிகாந்தம் கையெழுத்துப் பிரதிஎன்னவாயிற்று?—லட்சுமிகாந்தம் அவைகளை எடுத்துக்கொண்டு போய்விட்டார். எஞ்சி இருந்த 2 கையெழுத்துப் பிரதிகளை பொலிசார் சோதனைபிட்டு கைப்பற்றிகொண்டு போய்விட்டனர். மததிய அரசினர் உத்தரவின்றி சினிமாதூதை பிரசுரித்ததற்காக என்மீதும் லட்சுமிகாந்தம் மீதும் வழக்குத் தொடரப்பட்டது; நாங்கள் கைது செய்யப்பட்டோம். அப்பொழுது என் அச்சுக்கூடம் சோதனைபிடப்பட்டது,

என்னிடம் தற்சமயம் ஒரு கையெழுத்துப் பிரதியும் கிடையாது; லட்சுமிகாந்தம் வனமாலி அச்சுக்கூட சம்பவம் பற்றி பொலிசுக்குக் கொடுத்த புகாரை சாட்சி அடையாளம் கண்டு பிடித்தான்; இது தாக்கல் செய்யப்பட்டது,

சாட்சியை 1, 2, 3ம் எதிரிகள் அட்வகேட்கள் குறுக்கு விசாரணை செய்யவில்லை; 4-ம் எதிரி அட்வகேட் திரு கோவிந்தஸ்வாமிநாதன் சாட்சி லட்சுமிகாந்தம் வனமாலி அச்சுக்கூடத்தில் சமபவம்பற்றி கூறியதை ஆட்சேபிப்பதாகச் சொன்னார்

வழக்காளி பக்க நியாயவாதி:— எனக்கு லட்சுமிகாந்தம் சொன்னது வேண்டவே வேண்டாம்

சாட்சி நடந்ததைச் சொல்லிவந்தார் எதிரி வக்கீல் திரு டி எம் கஸ்தூரி பிறகு குறுக்கு விசாரணை செய்தார்:

சாட்சி சினிமா தூதுக்கு சொந்தக்காரர் லட்சுமிகாந்தம் லாபமெல்லாம் அவருக்குத்தான் எனக்கு அச்சிடும் செலவுதான் பத்திரிகையில் என்ன எழுதியிருக்கிறதென்பதை நான் பார்த்ததுதான் அச்சிடுவேன் சர்க்காருக்கு விரோதமில்லாத எதையும் நான் பிரசுரிப்பேன் பொங்கல் மலர் சம்பந்தமாய் முன்னாலேயே விளம்பரப்படுத்தபடியிருந்தது, அதற்கு முன்பணம் வாங்கியிருந்தார் என்பது எனக்குத் தெரியாது சினிமா தூதினை சில வெளியீடுகளுக்குத்தான் அதிக தேவையிருந்தது பொங்கல் மலர் பொங்கல் [illegible] பதிலும் [illegible] விலை [illegible]

பன்னைக்கண்டிப் பிள்ளையார் கோவில்

வடமராணம் கரைச்சிப் பகுதி முரசுமோட்டையிலுள்ள பன்னைக் கண்டி ஆனைமுகன் தேவஸ்தான பரிபாலனத்திற்குத் தர்மகர்த்தாக்களையும் இன்னுமதற்காக வேண்டிய நிர்வாகசபைகளையும் தெரிவதற்கு ஒரு பொதுக்கூட்டம் வருகிற பங்குனி மாசம் 4-ந் தேதி (17-3-45) பிற்பகல் 5 மணிக்கு மேற்படி தேவஸ்தானத்திற் கூட்ட இவ்விடத்தில் வழிபாடு செய்வோர் நிச்சயித்திருக்கின்றனரென அறிகிறோம்.

டோக்கியோ நகரம் தீப்பற்றி எரிகிறதாம்

லண்டன், மார்ச் 10

பஸிபிக் யுத்தத்தில் பிரமாண்டமான விமானப்படைகள் இன்றுகாலை ஜப்பான்மீது முதற் தடவையாக நெருப்புக் குண்டுகளைப் பிரயோகித்துத் தாக்கின. டோக்கியோவின் மத்திய பாகமும், 10 சதுர மைல் விஸ்தீரணம் கொண்ட ஸ்தலத்துக்குள்ளிருக்கும் கைத்தொழில் ஸ்தாபனங்களும் கடுமையாகத் தாக்கப்பட்டன. மொத்தம் 1 000 டன்களுக்கு அதிகமான நெருப்புக் குண்டுகள் வீசப்பட்டன. தலைநகருக்கு மேலே சத்துருக்களின் எதிர்ப்பு கடுமையாகவிருந்த போதிலும் அதிக விமானங்கள் உபயோகிக்கப்படவில்லை என்றும் குண்டு வீச்சின விளைவாகத் தாக்குண்ட பிரதேசம் ஒரே நெருப்புப் பிரளயமாகத் தெரிந்ததென்றும் ஸ்தலத்திலிருந்து திரும்பிய விமானிகள் தெரிவித்தனர். ஜப்பானிய சக்கரவர்த்தியின் அரண்மனையிலிருந்து 2 மைல் தூரத்திலுள்ள ஸ்தலம்தான் இலக்கு வைத்து தாக்கப்பட்டது.

குறிஞ்சிப்பாட்டு ஞாபகம்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஆறுமுக நாவலர் போன்ற மகான்கள் தேடிய புகழை மாசுபடுத்தக் கூடாது. ஆங்கிலம் படித்தவன் தமிழறிவான் என்று தனித்தமிழன் எண்ண வேண்டும். தமிழ் செல்வாக்குள்ள பாஷை என்று அதனை ஆங்கிலம் பயின்ற செல்வப் பிள்ளைகள் நினைக்க வேண்டும். தமிழில் புலவன் வேறு, விதுவான் வேறு பண்டிதன் வேறு என்றதை ஒருவரும் புறந்தள்ளலாகாது. தமிழ் வாழக.

விளம்பரம்

குத்தகைக்கேனும் விற்பனைக்கேனும் கொடுக்கப்படும்

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த துணைவியிலுள்ள 35 பரப்புக்கொண்ட வயலும் மூன்று வளவுகளும் கொடுக்கத்தக்கனவாயிருக்கின்றன. காணிகளைப் பார்க்கவும் விலை பேசவும் விரும்புவோர் முந்தியே எம்முடன் ஒழுங்கு செய்துகொள்ளவும். தேடியானவர்கள், டக்டர் சிவசிதம்பரம், மாட்டின் தெரு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்குத் தெரிவிக்கவும்.

(Mis. 334, 12 & 19.3.45)

குவதிலேயே இருந்தது இரண்டு பாரங்கள் அடுக்கப்பட்டிருந்தன மொத்தம் எத்தனை பாரம் எபைது எனக்குத் தெரியாது

திரு பார்த்தசாரதி நாயக்கரின் கேள்விகளுக்குப் பதில்:—

நீதிபதிக் கோர்ட்டில் எனக்கு ரூபா 200 அபராதம் போடப்பட்டது வனமாலி அச்சு ஆபீஸ் ஆரம்பிக்குமுன் சபாபதிபபிள்ளை எனமீது அவதூறு வழக்கு நடத்தினார் அது சம்பந்தபாக கலகைப் பிரதிகளும் தாக்கல் செய்திருக்கக்கூடும் நான மனனிப்புக் கேட்டிருக்கக்கூடும்

[illegible] குமாரதிரி இப்பொழுது [illegible] வழக்கு வருமென்று

தீவுப்பகுதித் தமிழாசிரியர் சங்கம்

இம்மாதம் 20-ந் திகதி (3-3-45) சனியன்று தீவுப்பகுதித் தமிழாசிரியருட் பெரும்பாலார், தீவுப்பகுதித் தமிழாசிரியர் சங்கம் அமைக்க விரும்பி, வித்தியாதரிசி திரு இராசசிங்கம் அவர்களின் முயற்சியால் RC ஆண்கள் தமிழ்ப் பாடசாலையிலே கூடினர். கூட்டத் தலைவர் வேலணைத் தீவுத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் திரு. இ. மருதையனார் அவர்களே. வலிகாமம் மேற்குத் தீவுப்பகுதித் தமிழாசிரியர் சங்கக் காரியதரிசி, தலைவருள்ளிட்ட சிலரும் அங்கு வந்திருந்தனர்.

கூட்டத் தலைவரவர்கள் தீவுப்பகுதித் தமிழாசிரியர் சங்கம் இன்றியமையாது வேண்டப்படுதற்குரிய காரணங்கள் இவையெனச் சுட்டிக்காட்டியபின்னர் தீவுப் பகுதித் தமிழாசிரியர் சங்கம் ஒன்று நிறுவப்படுதல் வேண்டும் என்னுங் கொள்கையை எடுத்துக் கூறினர். சபையாரு ஒருவர் அதனை அநுவதிக்க அது சபையாரின் உடன்பாட்டைப் பெற்றது.

அப்பொழுது வலிகாமம் மேற்குத் தீவுப்பகுதி யாசிரியர் சங்கப் பிரதிநிதிகள், பல்லாண்டுகளாகத் தம்மோடு ஒன்றுபட்டிருந்த தீவுப்பகுதியார் பிரிவது தமக்கு மிக்க மனத்துன்பத்தைத் தருகின்றதென்றும், பழமைபோற் கூடியிருந்து கொண்டே தீவுப்பகுதியார் தமக்கு வேண்டிய செய்து கொள்ளுதல் முடியுமென்றும், இருபகுதியினரும சேர்ந்திருப்பின் பெரிய காரியங்களையுஞ் சாதித்தல் இலகுவென்றும் இவ்வாறு கூறி பிரியாதிருத்தல் விரும்பப்படத் தக்கதென்னுந் தங் கருத்தை வற்புறுத்தினர்.

சபையிலிருந்த பெரியோர் சிலர் எழுந்து தம் பிரிவு உண்மையிலே பிரிவன்றென்றும், வேண்டியபோதெல்லாம் அவர்களோடு சேர்ந்துழைக்கத் தாம் திடமான விருப்புடையோரென்றும், பிரிதற்குக் காரணம் எவ்வித மாறுபாடன்றென்றும், தமக்குரிய கருமங்களை இயன்றவரை தாமே நடத்துவதுதான் சரியானதும் நன்மை பயப்பதுமாகுமென்றுங் கூறி மேற்படி சங்கம் நிறுவப்படல் வேண்டுமென்பதைத் தெளிவாக்கிய பின்னர் தீவுப்பகுதித் தமிழாசிரியர் சங்க உத்தியோகஸ்தர் தெரிவு ஆரம்பித்தது.

உத்தியோகஸ்தரைத் தெரியுமுன்னர், மேற்படி சங்கத்திற்குத் 'தற்காலிக தலைவர்' ஒருவரைத் தெரிந்து, அவர் தலைமையில உத்தியோகஸ்தர் தெரிவு நடைபெறுதலே தக்கதென்னும் வித்தியாதரிசியவர்களின் கருத்துக்கிணங்க சபையார் 'தற்காலிகத் தலைவராக' திரு இ. மருதையனார் அவர்களையே தெரிந்தனர். அவர்கள் தலைமையிலே, தீவுதோறும் ஒவ்வொரு உத்தியோகஸ்தரேனும் இருத்தல் இன்றியமையாதென்று சபையார் விரும்பியவண்ணம் உத்தியோகஸ்தர் தெரிவு நிகழ்ந்தது.

ஒவ்வோருத்தியோகத்திற்கும் இவ்விருவரோ மும்மூறு பேரோ பிரேரித்து அநுவதிக்கப்பட்டனரெனினும் ஏனையோரைப் பிரேரித்தோர் தம் பிரேரணையைத் தாமே மீட்டுக்கொள்ள அவர்களுள்ளே தகுதியுடையோருவரே ஒவ்வொன்றற்கும் சபையாரின் ஏகோபித்த ஆதரவு பெற்றனர்.

உத்தியோகஸ்தர் தெரிவின்பின் கூட்டம் நிறைவடைந்தது. —டிக.

தேவை

கொட்டடி ஐக்கிய பண்டகசாலைக்கு ஓர் மனேஜர் தேவை. வியாபார அனுபவமுள்ளவர் விரும்பப்படுவர். சம்பளம் ரூபா 50 பிணை ரொக்கம் ரூபா 500, அல்லது ரூபா 10,0 பெறுமதியான ஆதனம். 26-3-45 வரை மனுக்கள் அங்கீகரிக்கப்படும்.

கொட்டடி வட்டாரத்தில் நெடர்புடையோருடைய மனுக்கள் கவனிக்கப்படமாட்டாது.

காரியதரிசி
கொட்டடி ஐக்கிய பண்டகசாலை
யாழ்ப்பாணம்.

(Mis, 337, 12 & 15-3-45, 12-3-45,

உலகளுக்குத் தெரியுமா? — இதில் ஒன்றும் அவதூறு இல்லை என்மீதும் லட்சுமிகாந்தம்மீதும் நீதிபதிக் கோர்ட்டில ஒரு அவதூறு வழக்கு நடந்தது தெரியாமல் குற்றத்தை ஒப்புக் கொண்டேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதம்

'வடமராட்சிச் சமூகசேவா சங்கமும்' 'அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் சங்கமும்'

1910-ம் ஆண்டில் வதிரிப் பகுதியில் வடமராட்சிச் சமூக சேவா சங்கம் என்னும் பெயருடன் ஓர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. சங்கத்துக்குப் பெயர் சூட்டும்போது தாழ்த்தப்பட்ட ஹரிசன சிறுபான்மைச் சமூகம் எனனும் பெயர்க ளெல்லாம் அகலி ஆராயப்பட்டு இப் பெயர்க ளெல்லாம் நம்மை வடமராட்சிச் சன சங்கத்தினின்றும் வேறு பிரித்து அறியக்கூடியவைக ளாகு மெனநினைத்து, யாவருடனு மொத்துழைத்தச்சமூக சீர்திருத்தம்கல்வி வளர்ச்சி பொருளாதாரம் சுகாதாரம் ஒழுக்கம் முதலியவைகளில் நமது சமூகத்தவர்க்குச் சேவை செய்யும் பெருநோக்கங்கொண்டு "வடமராட்சிச் சமூக சேவாசங்கம்' என்னும் பெயரே தகுந்த தெனக் கருதிப் பெயர் சூட்டி வைத்தனர். அதற்கேற்படி காலாகாலத்தில் தொண்டர்படையும் ஏற்படுத்தி சமூகத்தினர்களுக்குச் சேவையான சில கருமங்களிலும் ஈடுபட்டுப் பொதுக்கூட்டம் மகாநாடுகளில் இந்த நோக்கத்தில் அனுதாப முள்ள சில பெரியாருடைய அனுசரணையும் பெற்று நடைபெற்று வந்தது.

ஆனால், இப்போது 'சோல்பரி' கொம்மிஷனுடன் கலந்து பேசும்படி ஏற்படுத்தப்பட்ட 'அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் சங்கத்தின் 'பிரித்துணர்ந்து' சங்கப் பெயருக்கேற்பப் பிரித்துணரும் சில ஒடுங்கிய மனப்பான்மையான கோட்பாடுகளை யாதரித்து ஷை சங்கம் நடக்கத் தொடங்கி, பல பிரிவினைகட்கும் இடமாகிச் சங்கப் பெயருக்கு இழுக்காகவும் சங்க அங்கத்தவர் ஆனுதாபிகள் பலருக்கு மனவேற்றுமையை ஏற்படுத்துவதாகவும் காணப்படுவது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

அ. இ. சி. தமிழர் எனப்படுவோர் கருதுகிறபடி ஒடுக்கப்பாடு என்பது தற்காலத்துக்குக் கொஞ்சமும் பொருந்தாது. 'பஞ்சமர்' என்னும் பெயர் எந்த நூலிலும் வழக்கிலும் இல்லாத ஒரு சொல்லாகுமே! அதை யார் விளம்பரங்களிற் போட்டவர்? என ஆவேசங்கொண்டு அப் பெயரை அறவே அழிக்கத் (அழித்துவிட்ட) தலைப்பட்ட இவர்கள், இப்போது ஒடுக்கப்பட்டவர் (Depressed என்பது போன்ற பெயர்களால் தம்மை வலிந்து அழைக்கத்தலையிடுவதேனோ? ஒடுக்குகிறவர் ஒரு சாரார், ஒடுக்கப்படுபவர் இன்னொரு சாரார். இவைகள் என்ன காரணத்தினால் நடைபெறுகின்றன? இவைஉண்மையாய்த் தற்போதும் நடைபெறுகின்றனவா? அரசியலிலும் இவ்வேறுபாடு உண்டா? என இவைகளை யுன்றி யுணரும்போது இவை நமக்குப் பெரும் அவமானமும் சுயமரியாதைசகுப் பங்கமானவையு மாகுமே. கீழ்நிலையிலுள்ளோர் தமது சுதந்திரத்தைப் பறறி உணர்ச்சி கொண்டிருப்பது போலவே மேல்நிலையிலுள்ளோரும் கீழ்நிலையுள்ளோரிக குறைவான கலையைப்பறறி உணர்ச்சி கொண்டு அதற்கேற்ற பேச்சுள செயல்கள் ஆறறி நமமுடன அந்நியோன்யமாய் வாழ்நதுவரும் இக்காலத்தில் இவ்வேற்றுமை உணர்ச்சி நம்மிலுதிப்பானேன்? அரசியலில் ஆகைப்புகுத்தத் தெண்டிப்பதேன்? எனவே நாம் உணர்ந்து இதை எழுதலானோம். அடிமைத்தன உணர்ச்சியுள்ள மனோதோற்றத்தினால் சகலமும் அடிமைத்தனமயமாகவே தோன்றும். ஒடுக்கப்பாடு என்பது ஒரு சாதாரண உணர்ச்சி. இது எந்த முண்டு எந்தேற்றசிலு முண்டு. சிங்களவர் ஒடுக்குகிறார்க ளென்று தமிழர் தம்மில் கினைக்கிறார்கள். ஏழைகள் தம்மைச் செல்வர்கள் நிந்திக்கிறார்களென்றும், பல சாலிகள் பலவீனரையும் கூடியவர் குறைந்தவரையும் ஒரு தேசத்தவர் தமமை மற்றத தேசத்தவரும் ஒடுக்குகிறார்க ளெனவே எணணுகிறார்கள். இது ஒரு அடிமைத்தன உணர்ச்சியா யிருக்கலாம். சுதந்தர உணர்ச்சியா யிருக்கலாம், எம்மை ஒருவர் இம்சிக்க முடியாது என்ற ஒரு மேலான - வீரமான உணர்ச்சி நமமில உதிக்கவேண்டியது. அன்றியும இம்சிக்கப்படநேர்ந்தாலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியதே ஜெயம். எவருடனும் அஹிம்சா முறையில நடந்து கருமங்களை யாற்றல வேணடும். அதோ மனப்பான்மையால ஏனையோரதுமின்றி.

வ. ச. சே. சங்க உத்தியோகம் படைத்த பெரியோரே! நாட்டுக்குத் தொண்டு செய்யும் பெருநோக்கமிட்டு பட்ட தங்கள் தியாக உணர்ச்சிக்கேற்ப, கருமங்களை யாற்றி, நமது சங்கம் வடமராட்சிப் பகுதியில் மாசுதிமறற எவ்விடத்தும் ஓங்கி பரவுதலை வளர்த்து நற்கருமங்களைப் புரிந்து பெரிதும் சிறந்தோங்க வளர உறுதுணையாக இருப்பீர்களாக.

எல்லாம் வல்ல இறைவன் தங்களை வழி நடத்துவாராக.

இங்ஙனம்,

எஸ். எஸ். வீ. மாணவன்,
ஏதிர் காடசியர்.

இலட்சுமிகாந்தம் கொலை விசாரணை

1ம் பக்கத் தொடர்ச்சி

நான் மயிலாப்பூரில் நடுத்தெருவில் இருக்கிறேன், நான லட்சுமிகாந்தத்தின் ஆனல்லவென்று அவர் சொல்லிக்கொண்டிருந்தார். நாயுடு அவரைக் கையின் முட்டிமேல் அடித்தார். அப்பொழுது கதவு திறக்கப்பட்டது. இளங்கோவன் புரடக்ஷன் பங்காளியான செங்கல்வராயச் செட்டியும் திருநாவுக்கரசும் உள்ளே வந்தார்கள். திருநாவுக்கரசு அவனை என்னிடங் கொடுங்கள், நான் உண்மையைச் சொல்லச்சொல்கிறேன் என்று அந்தப் புது ஆளின் முகத்தில் ஒரு குத்துவிட்டார். பல்லில் ரத்தம் வந்தது. அதைத் தழுவச்சொன்னார்கள். பிறகு ஹோட்டல் மானேஜர் சுமி வந்தார். அவர் பொலிசுக்குப் போன் பண்ணினார். சப் இன்ஸ்பெக்டர் வந்து விசாரித்துவிட்டுப் புது ஆளை அனுப்பிவிட்டார்.

கே:—இது எல்லாம் நடந்தது எப்பொழுது? — சுமார் 7-30 மணிக்கு அந்தப் புது ஆள் போனபோது சுமார் 9 மணி இருக்கும்.

கே:—இந்த வழக்கு சம்பந்தமாய் உன்னைப் பொலிசார் விசாரித்தார்களா?—ஆம்

கே:—நீதிபதி முன்பு விசாரித்தார்களா?—ஆம்

கே:—மாணவ இரண்டாவது நீதிபதிமுன்பு ஒரு வாக்குமூலம் கொடுத்திருக்கிறீரா?—ஆம்

கே:—இதுதானா அந்த வாக்குமூலம்?—ஆம்

கே:—வாக்குமூலத்தில் சொல்லியிருப்பதெல்லாம் உண்மைதானா?—ஆம்

அதன்மேல் எதிரிகள் பக்கக் குறுக்கு விசாரணை ஆரம்பமாயிற்று; திரு வி. ராஜகோபாலாசாரியார் கேள்விகளுக்குச் சாட்சி சாட்சியமளித்தார்.

'இந்துநேசன் ஆசிரியர்' திரு. அனந்தையர் சாட்சியம்

வழக்காளி சார்பில் 18-வது சாட்சியாக திரு. எல். அனந்தையர் விசாரிக்கப்பட்டார்.

சாக்ஷி கூறியதாவது:—

நான் 'இந்துநேசன்' ஆசிரியராக இப்பொழுது இருக்கிறேன். இப்பொழுது நானே அதன் பிரசுரகர்த்தா.

கேள்வி:— யூலை 1944 - லிருந்து, நவம்பர் 1944 வரை நீவிர் ஆசிரியராக இருந்தீரா?—இல்லை அப்பொழுது லக்ஷ்மிகாந்தம் ஆசிரியராக இருந்தார், அவர் இப்பொழுது இறந்துவிட்டார். அப்பொழுது நான் பிரசுரகர்த்தாவாக இருந்தேன்.

23-7 44 இல் பவர் அப் அட்டாணியின்படி லக்ஷ்மிகாந்தம் அதன் ஆசிரியரானார். அதற்கு முன்பு அவர் ஆசிரியர் வேலை பார்க்கவில்லை. 1944 யூலையிலிருந்து 28-10-44 வரை அவர் ஆசிரியராக இருந்தார்.

பத்திரிகையின் அச்சுக்கூடத்திற்கு விஷயங்களை லக்ஷ்மிகாந்தம் பிரசுரிக்க அனுப்புவார்.

லக்ஷ்மிகாந்தம் கையெழுத்து எனக்குத் தெரியும். அவர் அனுப்பியவைகளைப் படித்துவிட்டு பிறகு அச்சடிக்க நான் அவைகளை அனுப்புவது வழக்கம்.

'இந்துநேசன்' பிரதி யொன்று சாக்ஷிக்குக் காண்பிக்கப்பட்டது. அதன் திகதி 28-10 44 லக்ஷ்மிகாந்தம் அதிலுள்ள விஷய மொன்றை எழுதியிருந்தார் என்றும், அதைத தாம் படித்த பிறகுதான் பிரசுரித்ததாகவும் எழுதினார். (அதிலுள்ள விஷயம் வடிவேலு பற்றி லக்ஷ்மிகாந்தம் எழுதியது)

19 8-44 பத்திரிகை துண்டு ஒன்று சாக்ஷிக்குக் காட்டப்பட்டது. லக்ஷ்மிகாந்தம் அதை எழுதித் தனக்குப் பிரசுரத்திற்கு அனுப்பியதாகச் சாக்ஷி சொன்னார்.

19-8-44 பத்திரிகை துண்டுஒன்று சாக்ஷிக்குக் கொடுக்கப்பட்டது. அதையும் லக்ஷ்மிகாந்தம் தனக்குப் பிரசுரத்திற்கு அனுப்பியதெனச் சாக்ஷி கூறி அதைத் தாம் பிரசுரித்ததாகவும் கூறினார்.

சாக்ஷிக்கு பிறகு 22-7-44 பத்திரிகை காட்டப்பட்டது. லக்ஷ்மிகாந்தம் விஷயத்தைத் தனக்குப் பிரசுரத்திற்கு அனுப்பியதாகவும் அதைதாம் பத்திரிகையில் பிரசுரித்ததாகவும் சாக்ஷி ஒப்புக்கொண்டார். தனக்கு லக்ஷ்மிகாந்தம் கையெழுத்தைத் தெரியுமென்று சாக்ஷி தெரிவித்தார்.

கோர்ட்:—இவைகளின் 'மான்ஸ்கிரிப்ட்" என்னவாயின?

சாக்ஷி—அவை அழிக்கப்பட்டன.

பத்திரிகைக்கான விஷயங்களைத் தம் கையெழுத்திலகான் லக்ஷ்மிகாந்தம் எழுதி அனுப்பினார் என்றுசாக்ஷி கூறினார். பத்திரிகை பிரசுரமான பிறகு 'மான்ஸ்கிரிப்ட்'கள் அச்சடிக்குவோரால் அழிக்கப்பட்டன வென்று சாக்ஷி நீதிபதி கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தார்.

5-8-44, 12-8-44, 26-8-44, 2-9 44 முதலிய பல பத்திரிகைகளைச் சரிபார்த்தது அவைகளி லுள்ள விஷயங்களை லக்ஷ்மிகாந்தம் எழுதியது தான் எனறும அதைத் தாம் பிரசுரித்ததாகவும சாக்ஷி மேலும் தொ

தொடர்ச்சி 5) பக்கம்

ஓட்டர் ஆங்கத்துக்கு ஹிட்லர் விஜயம்

லண்டன், மார்ச் 9

ஓட்டர் அரங்கத்துக்கு ஹிட்லர் இன்று விஜயம் செய்திருக்கிறார் என்று ஜெர்மன் வெளிநாட்டுச் செய்தி ஸ்தாபனம் இன்று அறிவிக்கிறது. அது மேலும் தெரிவிப்பதாவது:.

அங்குள்ள ஜெர்மன் பாதுகாப்புகளைக்கண்டு அவர் திருப்தியடைந்திருப்பதுடன் ஜெர்மன் துருப்புகளின் மனோநிலை திருப்தியளிக்கக் கூடியதாக இருக்கிறதென்றும் அவர் மனதைத் திடப்படுத்திக்கொண்டார்.

இந்துசாதனம்

பத்திரக் கிரயம்

ஒருவருடத்திற்கு

யாழ்ப்பாணப் பட்டின எல்லைக்குள் ஆள் மூலம்

ஆங்கிலம்.	தமிழ்.	ஆங்கிலம்	தமிழ்
ரூ. ச.	ரூ. ச.	ரூ.	ச.
6 50	6 50	10	50

இந்தியா இலங்கை தபால் மூலம்

ஆங்கிலம்.	தமிழ்.	ஆங்கிலம்	தமிழ்.
ரூ. ச.	ரூ. ச.	ரூ.	ச.
9 50	9 50	13	50

மாதருக்கு ஒரு வரப்பிரசாதம்

டாக்டர். எஸ். சி. பாலின் "சாந்தன் றக்ஷா"

அகாலப்பிரசவத்தை முற்றாகத்தடுத்து பாதுகாப்பும் சௌக்கியமுமான சாதாரண பிரசவத்தை உறுதியாக ஏற்படுத்துவதற்கு ஒரு அற்புதமான கைகண்டதைலம்.

டாக்டர். எஸ். சி. பாலின் "சாந்தன் றக்ஷா" கற்ப ஸ்திரீகளுக்கு ஆரம்பத்திலேயே பரிதாபகரமான வியாதிகளாகிய வாந்தி, (காலை வியாதி) முதலியவற்றைத் தடுத்து மற்றும் நாட்சென்ற கற்ப வியாதிகளைக் குணப்படுத்துவதுமல்லாமல் இரத்தக் கசிவைக் கட்டுப்படுத்தி, நச்சுக்குடலிலிருந்து இரத்தக்கறைபையும் பல சிக்கல்களையும் கற்பப் பையில் புகுந்து அதனிமித்தம் அபாயகரமான இரத்தக்கேடு உண்டுபண்ணவிடாமல் காப்பாற்றுகிறது.

மேற்படிதைலத்தை வெளிப்பூச்சுக்கு மட்டுமே உபயோகிக்கலாம். மாதரின் கற்ப காலங்களில் இத்தைலம் விலைமதிக்கத் தகாத ஒரு வரப்பிரசாதமாகும். நூற்றுக்கணக்கான எதிர்பாராத சிபார்சுக் கடிதங்கள பார்வைக்கிருக்கின்றன.

ஒரு ஸ்டாண்டார் சைஸ் போத்தல் விலை ரூபாய் 4—75.

டாக்டர். எஸ். சி. பால் அண்டு சன்ஸ், கல்கத்தா.

ஏக விநியோகஸ்தர்கள்:

கொன்சிஸ்ரறி ஸ்டோர்ஸ், 59 சாய்ப்புத்தெரு கொழும்பு.

யாழ்ப்பாணத்தில்: ஓரியண்டல் இம்போர்ட்கம்பெனி
28, நம்பர் சாய்ப்புத் தெருவில் பெற்றுக்கொள்ளலாம்.

H. 131 12-10-44—

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, The Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday, 12, March, 1945.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org